விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 128 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 12 வியாழக்கிழமை (25.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் இன நல்லிணக்கத்துக்குப் பாதகம்

## வடக்கு ஆளுநர் செயலகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 18.03.2024 அன்று வலம்புரி நாளிதழில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் வலம்புரியின் பிரதம ஆசிரியருக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநரால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் கடந்த 22.04.2024 அன்று வலம்புரியின் பிரதம ஆசிரியரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டதுடன் விசாரணையும் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஊடக அமைப்புகள், பத்திரிகையாளர்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் அரசியல் பேச்சாளர்கள் தமது நியாயபூர்வமான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் விரிவான அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் (23.04.2024) இரவு 10.57 மணியளவில் அனுப்பியிருந்தது.

23ஆம் திகதி விடுமுறை நாளாக இருந்தபோதிலும் இரவிரவாகப் பணியாற்றி இரவு 11 மணியளவில் அனுப்பப்பட்ட குறித்த அறிக்கை நேற்றைய தினம் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டியதாயினும் அச்சுப் பணிகள் நிறைவடைந்தமையால், வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் அனுப்பிய அறிக்கையை நேற்றைய தினம் பிரசுரிக்க முடியாமல் போயிற்று.

பிரஸ்தாப அறிக்கை இன்று எந்த மாற்றமும் இன்றி அப்படியே இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)

(02ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு ஈரான் துணை நிற்கும்



## ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி

(கொழும்பு)

இலங்கைக்கு ஈரான் என்றும் துணை நிற்கும் என்று தெரிவித்துள்ள ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, ஈரான் தனது அறிவு, நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகும் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு ஆளுநர் செயலகத்தின் அறிக்கைக்கான

**வலம்புரி ஆசிரியரின் தன்னிலை விளக்கம் நாளை (26) வெளிவரும் (ஆ-ர்)**

3 நாள் காய்ச்சல்

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)

மூன்று நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

15

## படகின் காற்றாடி வெட்டியதில் இளம் குடும்பஸ்தர் பலி

### மன்னாரில் சம்பவம்



(மன்னார்)

படகு இயந்திரத்தின் காற்றாடி வெட்டியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் முத்தரிப்புத்துறையில் நேற்று இச்சம்பவம் இடம்

15

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு

### மே மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கு தொடர்பான விசாரணை நேற்று திருகோணமலை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

15

## உலகின் மிகப்பெரிய அரிதான இரத்தினக்கல்

### பதுளையில் கண்டுபிடிப்பு



(பதுளை)

உலகின் மிகப்பெரிய அரிதான இரத்தினக்கல் பதுளையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 802 கிலோ கிராம் எடையுடைய

15

## பால்மா விலை குறைப்பு

(கொழும்பு)

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை

15

## மலேரியா நோயாளர்கள் நாட்டில் அடையாளம்

### சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இந்த வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் 9 மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மலேரியா கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் புபுது சூலசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின்...

*ஊடக அறிக்கை,*
*தனிப்பட்ட விடயங்களை ஊடகங்களின் துணைகொண்டு சாதித்துக்கொள்ள நினைப்பது நீதியான செயற்பாடு அல்லவென வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிப்பு.*

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வலம்புரி பத்திரிகையில் கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி பிரசுரமாகிய ஆசிரியர் தலையங்கம் தொடர்பில், ஆளுநர் செயலகத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து பல்வேறு விமர்சனங்கள் ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் பகிரப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் இன்றைய தினம் (நேற்று முன்தினம், 23.04.2024) பிரசுரமாகிய வலம்புரி பத்திரிகையின் முதற்பக்கத்திலும், ஊடகங்களின் சுதந்திரத்தை ஆளுநர் கேள்விக்குள்ளாக்குவதை போன்று தலைப்பிடப்பட்டுச் செய்தி பிரசுரமாகியுள்ளது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகங்கள் அதன் தாற்பரியம் அறிந்து செயற்பட வேண்டும் என்பதே எமது கருத்தாகும். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கணக்காளரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய, வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு தனது நியாயப்பாடுகளை சமர்ப்பிக்க பொலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்பிற்கு அமைய, கடந்த 22 ஆம் திகதி வாக்கு மூலம் வழங்க அவர் சென்றிருந்தார். விடயம் தொடர்பான முறைப்பாடு ஆளுநர் செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதில் கௌரவ ஆளுநரின் எவ்வித தலையீடுகளும் இல்லை என்பதை இந்த ஊடக அறிக்கையினூடாக கூறிக்கொள்கின்றோம்.

வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகச் செயற்படும் நல்லையா விஜயசுந்தரம் என்பவர் ஓர் அரச உத்தியோகஸ்தர். ஆசிரியர் நியமனம் பெற்றுள்ள இவர், சுமார் 15 வருடங்கள் கடமை நிறைவேற்று அதிபராகச் செயற்பட்டு வந்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் பல தடவைகள் அதிபர் தரத்திற்கான போட்டி பரீட்சைகள் நடத்தப்பட்ட போதிலும், இவர் உள்ளிட்ட சில கடமை நிறைவேற்று அதிபர்கள் பரீட்சையில் சித்தியடைய தவறியுள்ளனர். இந்நிலையில், அண்மையில் அதிபர் சேவைக்கான போட்டி பரீட்சை நடத்தப்பட்டு வழங்கப்பட்ட அதிபர் நியமனத்தின் போதும், சில கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்வாங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்தால் சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர், கௌரவ ஆளுநரிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. மத்திய கல்வி அமைச்சிடமும் தமது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதால், அவர்களின் தீர்மானம் கிடைக்கும் வரை, கடமை நிறைவேற்று அதிபர்களாக செயற்பட அனுமதிக்குமாறு கௌரவ ஆளுநரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு அமைய, மத்திய அமைச்சின் தீர்மானம் வரும் வரை அவர்கள் கடமை நிறைவேற்று அதிபர்களாகச் செயற்பட கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதி வழங்கப்பட்டது. எனினும், இவர்களின் கோரிக்கையை அமைச்சரவை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த விடயங்கள் கௌரவ ஆளுநரின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டது என்பது தொடர்பில் கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்திற்குத் தெளிவுபடுத்தப்பட்ட பின்புலத்தில், வடக்கு மாகாணத்தின் அமைச்சுக்களின் செயலாளர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும், கௌரவ ஆளுநர் அவர்களின் நடவடிக்கை தொடர்பிலும், கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் "ஆளுநருக்கான அவசர மடல்" என்ற தலைப்பின் கீழ் விமர்சிக்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகக் கூறியுள்ள போதிலும், அதன் உண்மைத்தன்மையை அவர் வெளிப்படுத்தியிருக்கவில்லை. ஆதாரங்களுடன் எமக்கு அறிவித்திருந்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அதனை விடுத்து மக்களைக் குழப்பும் வகையில் செய்திகளை பிரசுரிப்பது எந்த வகையில் ஊடக தர்மத்திற்கு பொருத்தமானது?

இதேவேளை "சிங்களவர் ஒருவர் வடக்கின் ஆளுநராக இருந்தால்"... என்றும் அவர் தனது ஆசிரியர் தலைப்பில் எழுதியிருந்தார். இதனூடாக இன நல்லிணக்கத்திற்குப் பாதகம் ஏற்படும் வகையில் அவர் எழுதுகிறாரோ என்ற கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டி உள்ளது. மேலும் அதிமேதகு ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியாக நியமிக்கப்படும் ஆளுநர்கள் தொடர்பிலும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே பணியாற்றிய ஆளுநர்களின் செயற்பாடுகளை உதாரணம் காட்டி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கௌரவ ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்கு உட்பட்டு அவர் தனது பணியை சிறப்புற முன்னெடுத்துவரும் நிலையில், இவ்வாறான அவதூறான செய்திகளை பிரசுரிப்பது பொருத்தமற்ற செயல் என நாம் கருதுகின்றோம். வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர், அரச நியமனம் பெற்ற ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டு, இவ்வாறு தனது தனிப்பட்ட விடயங்களுக்காக, ஊடகத்தை பயன்படுத்துவதை ஒருபோதும் ஏற்க முடியாது.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, நாட்டில் தற்போது காணப்படும் சட்டங்களுக்கு அமைய, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியரான நல்லையா விஜயசுந்தரம் என்பவர் அரச உத்தியோகஸ்தர் என்ற அடிப்படையில், அவர் தொடர்பான திணைக்கள மட்ட ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்வதற்கான முன்னோடியாகவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனைத் தவிர, ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. நிர்வாக சமநிலையை சீர்குலைக்கும் வகையிலும், இன, மதங்களுக்கு இடையில் பங்கம் ஏற்படும் வகையில் அவர் செயற்பட்டுள்ளதாக நாம் கருதுகிறோம்.

பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஊடகங்கள் எம்மோடு இணைந்து செயற்பட வேண்டும். அரச சேவையை பெற்றுக்கொள்ள பொதுமக்கள் சிக்கலை எதிர்நோக்கும் பட்சத்தில் ஊடகங்கள் அவற்றை எமக்கு அறிவிக்க முடியும். அதை விடுத்து விமர்சனம் என்ற போர்வையில் ஊடக தர்மத்திற்கு எதிராக ஊடகங்கள் செயற்படக்கூடாது என்பதே எமது அவா.

ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் நாம் தலையிடுவதில்லை என்பதுடன் ஊடகங்களுடன் இணைந்து மக்கள் பணியாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதையும் கூறிக்கொள்கிறோம்.

ஆளுநர் செயலகம்,
வடக்கு மாகாணம்.


லங்கா மஹால் பிறைவேட் லிமிட்டட்
(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)

**வேலையாள் தேவை**
**(ஆண்,பெண்)**
A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
65, 2nd cross street, Vavuniya.
**077 839 3974**
(555)



அதிகமதிகமாக சுப பலன்களைத் தரும் பலமிகு
**ஹந்தஹன**
Handahana ராசி சுப பலன்
**ரூ.மூன்று மில்லியன்**
**சுப்பர் பரிசு வெற்றியாளர்**




ஹந்தஹன 729 ஆவது சீட்டிழுப்பிலே
ரூ.3,373,751.76ஐ வென்ற
சுப்பர் பரிசு வெற்றியாளர்




அடுத்த மில்லியன் வெற்றியாளர்
**நீங்களா?**

ராசி சுப பலன்
**NLB பொருத்தி உங்களது**
**மில்லியன் பரிசுக் கனவை நனவாக்கிடுங்கள்**
NLB | தேசிய லொத்தர்
வாழ்வின் கனவிற்கு – அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
(C-2282)


# மரண அறிவித்தல்



## செல்லையா கதிர்காமு (கடை ராசு)

(முன்னாள் திருபரன் களஞ்சிய உரிமையாளர்,
தாவளை இயற்றாலை ஸ்ரீ நாகதம்பிரான் – ஆலய தர்மகர்த்தா)

தாவளை இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வரணி இயற்றாலையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா கதிர்காமு அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை 23.04.2024 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும் நேருசா, பிரசாந்(பிரான்ஸ்), திருபரன்(கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயற்சி நிலைய தொழில்நுட்ப உதவியாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துலிங்கம், ரமேஸ்(CTB Bus நடத்துனர்) அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற இரத்தினம்(குஞ்சு, முன்னாள் நாகதம்பிரான் பூசகர்) மற்றும் பூரணம், கமலாதேவி, இந்திரகுமாரன்(துரை ஆட்டோ), யோகம்மா(வவுனியா), விக்னேஸ்வரன்(சாமி, கருமாரி அம்மன் கோவில் - வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தசாமி, கனகலிங்கம்(சின்னவர்), கனகராசா (லண்டன்), காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் மனோன்மணி, அருளாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (25.04.2024) இன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
துரை - 077 418 8291
(C-0202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மே, 11, 12. 2024.


# ஈரானுடன் வர்த்தகத் தொடர்பு; எச்சரிக்கை விடுத்த அமெரிக்கா!

**(வோஷிங்டன்)**

**ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கும் அபாயம் உள்ளதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி தனது 3 நாள் பாகிஸ்தானுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்ததை அடுத்து அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் பாகிஸ்தான் விஜயத்தின் போது ஈரானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை 10 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டு உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தினை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்துள்ளார்.

அத்தோடு, இந்த விஜயத்தின் போது இலங்கை மற்றும் ஈரான் ஐந்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)


## அமரவீர, லசந்த, துமிந்த ஆகியோரின் தடை உத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

அமைச்சர் மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் மே மாதம் 08 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக அமைச்சர்கள் தாக்கல் செய்த முறைப்பாடுகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் திறப்பு




(கொழும்பு)

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித்திட்டம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குப் பின்னர் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் இத்திட்டம் ஒன்றாகும். (நி-6)

# ரணில் - பசில் மீண்டும் மந்திராலோசனை



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான மற்றுமொரு சுற்று பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஹரின் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க, திரன் அலஸ், காஞ்சன விஜேசேகர ஆகியோரும் கலந்து கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளதோடு மே தினத்திற்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனவும் அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அதற்கு ஆதரவைப் பெற்றுக் கொள்ள அனைத்துத் தரப்பினரிடமும் எழுத்துபூர்வமாக கோரிக்கை விடுப்பதே சிறந்தது என தெரிவித்த பசில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டலஸ் அழகப்பெரும குழுவினர் உள்ளிட்ட கட்சிகளை மீளக் கொண்டு வருவதற்கும் ஆதரவை பெறுவதற்கு பிரதமரின் தலையீடு அவசியம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இறுதியில் அரசாங்கத்தின் பெரும்பாலான பணிகளை மேற்கொள்ள விரும்புவதால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுவை ஜூன் மாத இறுதியில் அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

## பாராளுமன்ற உறுப்பினராக வீரசேன சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

வீரசேன கமகே நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். நந்தசேனவின் மறைவால் வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வீரசேன கமகே சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (நி-6)



கண்ணீர் அஞ்சலி

மலர்வு 09.09.1931
உதிர்வு 23.04.2024

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி வசந்தி சந்திரகோபன் அவர்களின் மாமியார்

திருமதி. யோகேஸ்வரி இராமச்சந்திரன்

அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பின்னியெடுத்தார் பன்ட்

## வீழ்ந்தது குஜராத் ; எழுந்தது டில்லி



குஜராத் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் கடைசி பந்தில் அசத்திய டில்லி அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் "திரில்" வெற்றி பெற்றது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. டில்லி, அருண் ஜெட்லி மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் டில்லி, குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

**பன்ட் விளாசல்**

டில்லி அணிக்கு பிரேசர்-மெக்குர்க் (23) ஆறுதல் கொடுத்தார். பிரித்வி ஷா (11), ஷாய் ஹோப் (5) ஏமாற்றினர். பொறுப்பாக ஆடிய அக்சர் படேல் (66) அரைசதம் கடந்தார். மோகித் பந்தை சிக்சருக்கு அனுப்பிய அணித் தலைவர் ரிஷாப் பன்ட், 34 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

தொடர்ந்து அசத்திய பன்ட், மோகித் வீசிய கடைசி ஓவரில் 4 சிக்சர் உட்பட 31 ஓட்டங்கள் விளாசினார்.

**மோகித் மோசம்**

குஜராத் வேகப்பந்துவீச்சாளர் மோகித் சர்மா (73 ஓட்., 4 ஓவர்), ஐ.பி.எல்., அரங் கில் மோசமான பந்துவீச்சை பதிவு செய்தார். இதற்கு முன் ஹைதராபாத்தின் பசில் தம்பி (70 ஓட்., 4 ஓவர், எதிர்: பெங்களூரு, 2018) இருந்தார்.

20 ஓவர்களில் டில்லி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களை எடுத்தது. பன்ட் (88 ஓட்., 8 சிக்சர், 5 பவுண்டரி), டிரிஸ்டன் (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீசசில் குஜராத் சார்பில் சந்தீப் வாரியர் 3 விக்கெட் சாய்த்தார்.

**சுதர்சன் அபாரம்**

சவாலான இலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு அணித் தலைவர் சுப்மன் கில் (6) ஏமாற்றினார். சகா (39) ஓரளவு கைகொடுத்தார். அஸ்மதுல்லா (1) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய சாய் சுதர்சன் (65) அரைச்சதம் கடந்தார். ஷாருக்கான் (8), டிவாட்டியா (4) சோபிக்கவில்லை.

நார்ட்ஜே வீசிய 17ஆவது ஓவரில் 3 சிக்சர், ஒரு பவுண்டரி விளாசிய டேவிட் மில்லர், 21 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இவர் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சாய் கிஷோர் (13) நிலைக்கவில்லை.

**திரில் வெற்றி**

கடைசி ஓவரில் வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப் பட்டன. முகேஷ் குமார் பந்து வீசினார். முதலிரண்டு பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரஷித் கான், அடுத்த இரு பந்துகளை வீணடித்தார். ஐந்தாவது பந்தை சிக்சருக்கு அனுப்பிய இவர், கடைசி பந்தில் ஒரு ரன் கூட எடுக்கவில்லை. குஜராத் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 220 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. ரஷித் கான் (21) ஆட்டமிழக்காமல் இருந்தார். டில்லி சார்பில் ராசிக் சலாம் 3, குல்தீப் யாதவ் 2 விக்கெட் கைப்பற்றினர். (ம-7,10)



**100வது போட்டி**

டில்லிக்கு எதிராக களமிறங்கிய குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில், தனது 100ஆவது ஐ.பி.எல்., போட்டியில் விளையாடினார்.

இம்மைல்கல்லை எட்டிய 2வது இளம் (24 ஆண்டு, 229 நாள்) வீரரானார். முதலிடத் தில் ரஷித் கான் (24 ஆண்டு, 221 நாள்) உள்ளார்.

# இந்திய - பாக் டெஸ்ட் நடக்குமா? ரோகித் ஆசை நிறைவேறுமா?


"இந்தியா-பாகிஸ்தான் இடையிலான டெஸ்ட் மோதல் சுவாரஸ்யமாக இருக்கும். இதில் விளையாட ஆர்வமாக உள்ளேன்," என ரோகித் சர்மா தெரிவித்தார்.

மும்பை பயங்கரவாத தாக்குதலில்(2008) 150 பேர் பலியாகினர். இதற்கு பின் இந்தியா-பாகிஸ்தான் இடையே நல்லுறவு இல்லை. இரு தரப்பு கிரிக்கெட் தொடர் நடக்கவில்லை.

இரு அணிகளும் பொதுவான இடத்தில் ஐ.சி.சி., தொடரில் மட்டும் விளையாடின. கடந்த ஆண்டு ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் செல்ல இந்தியா மறுத்தது. இதையடுத்து பாகிஸ்தான் மண்ணில் இந்தியா விளையாட இருந்த போட்டிகள் இலங்கைக்கு மாற்றப்பட்டன.

**மத்திய அரசு மறுப்பு**

அடுத்த ஆண்டு சம்பியன்ஸ் டிராபி தொடர் பாகிஸ்தானில் நடக்க உள்ளது. இதில் இந்தியாவுக்காக இடத்தை மாற்ற முடியாது என பாகிஸ்தான் அறிவித்துள்ளது. ஐ.சி.சி.,க்கு அரசின் அனுமதியே முக்கியம். எந்த அணியையும் நிர்ப்பந்திக்காது. மத்திய அரசை பொறுத்தவரை பாகிஸ்தான் சென்று கிரிக்கெட் விளையாட இதுவரை அனுமதி அளிக்கவில்லை.



இந்தச் சூழலில், இங்கிலாந்து அல்லது அவுஸ்திரேலியா போன்ற பொதுவான இடத்தில் இந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் மோதலை நடத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து முன்னாள் வீரர்களான கில்கிறிஸ்ட்(ஆஸி.,), மைக்கல் வோகனுக்கு (இங்கி.,) இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா அளித்த பேட்டி,

பொதுவான இடத்தில் பாகிஸ்தானுடன் டெஸ்டில் பங்கேற்பதில் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. பாகிஸ்தான் அணியில் ஷாகீன் ஷா அப்ரிடி, நசீம் ஷா, ஆமர் ஜமால் உள்ளிட்ட "வேகப்புயல்கள்" உள்ளனர். பலமான பந்துவீச்சு இருப்பதால், சிறந்த அணியாக திகழ்கிறது. பாகிஸ்தானுடன் கடைசியாக 2007-08இல் டெஸ்டில் பங்கேற்றோம். மீண்டும் டெஸ்ட் விளையாட ஆர்வ மாக உள்ளேன். இரு அணிகளுக்கும் இடையிலான மோதல் சுவாரஸ்யமானதாக இருக்கும். நான் முழுவதும் கிரிக்கெட்டையே குறிப்பிடுகிறேன். வேறு விடயங்களை புகுத்த வேண்டாம். இங்கு பேட், பந்துக்கு மட்டுமே பங்கு உண்டு. இவ்வாறு ரோகித் சர்மா கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வி.பி.எஸ் .டி பத்திரண



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வி.பி.எஸ்.டி.பத்திரண நேற்று சம்பிரதாயபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றார்.

யாழ். பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக இருந்த, யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தனது பொறுப்புக்களை புதிய பணிப்பாளர் பத்திரணவிடம் கையளித்தார்.

இதன்போது வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கே.நந்தகுமாரன் உள்ளிட்ட சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (நி-6-33)

# வவு. கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக சோதனை நடவடிக்கை

## சந்தேக நபர்கள் 6 பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன் 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள துடன், கடவுச்சீட்டு காரியாலயம் முன் மோசடிகள் இடம் பெற்றால் முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக பொலிஸார் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த போது மோசடிகளில் ஈடுபட்டு வருபவர்கள் என சந்தேகத்தின் பேரில் ஆறு பேரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க எதிர்வரும் நாட்களில் கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக ஏதேனும் மோசடிகள் இடம்பெற்றால் தனது உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கமான 071 859 3520 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார். (நி-6-250)

# அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏல விற்பனை

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனை யிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது172) பெற்று அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

**வருடாந்த ஏல விற்பனை**

| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 29.04.2024 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 2 | பிரதேச செயலகம் கரவெட்டி | 29.04.2024 (திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ கரவெட்டி |
| 3 | பிரதேச செயலகம் தெல்லிப்பளை | 30.04.2024(செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 4 | பிரதேச செயலகம் உடுவில் | 30.04.2024 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.00 | பி.செ உடுவில் |
| 5 | பிரதேச செயலகம் நெடுந்தீவு | 30.04.2024 (செவ்வாய்க்கிழமை) | பி.ப 02.00 | பி.செ நெடுந்தீவு |
| 6 | பிரதேச செயலகம் காரைநகர் | 02.05.2024 (வியாழக்கிழமை) | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 7 | பிரதேச செயலகம் சங்கானை | 02.05.2024 (வியாழக்கிழமை) | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 8 | பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் | 02.05.2024 (வியாழக்கிழமை) | மு.ப 11.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 9 | தகவல் தொழில்நுட்ப பூங்கா | 03.05.2024 (வெள்ளிக்கிழமை) | மு.ப 09.30 | தகவல் தொழில்நுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ சங்க கட்டடம் |
| 10 | பிரதேச செயலகம் வேலணை | 03.05.2024 (வெள்ளிக்கிழமை) | மு.ப 11.00 | பி.செ வேலணை |
| 11 | பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை | 03.05.2024 (வெள்ளிக்கிழமை) | பி.ப 02.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 12 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 06.05.2024 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 13 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 06.05.2024 (திங்கட்கிழமை) | மு.ப 11.30 | பி.செ சாவகச்சேரி |
| 14 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 07.05.2024 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ யாழ்ப்பாணம் |
| 15 | பிரதேச செயலகம் நல்லூர் | 07.05.2024 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.30 | பி.செ நல்லூர் |
| 16 | மாவட்டச்செயலகம்- யாழ்ப்பாணம் | 08.05.2024 ((புதன் கிழமை) | மு.ப 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

**ம.பிரதீபன்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்(பதில்)**
**யாழ்.மாவட்டம்**

(சி-0198)

# அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் மன்னாரில் அமைதி வழி போராட்டம்



(மன்னார்)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களாக கடமையாற்றும் அரச உத்தியோகஸ்தர்கள் நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைதி வழி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

சம்பள உயர்வு, மேலதிக நேரகொடுப்பனவு, பதில் கடமை, காகிதாதி செலவுகள் உள்ளடங்கலாக பல்வேறு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதில் பல வருடங்களாக நீடித்து வரும் இழுபறி நிலையை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு கோரி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை அரச சுற்றறிக்கைக்கு அமைவாக 7500 அதிகரித்து வழங்கு, பதில் கடமைக்கான கொடுப்பனவை வழங்கு இல்லாவிட்டால் பதில் கடமையை நிறுத்து, வெளிக்கள கொடுப்பனவை 300 இல் இருந்து 3000 ரூபாவாக அதிகரி, காகிதாதி கொடுப்பனவை பெற்றுத் தாருங்கள், திணிக்காதே போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (நி-6-285)


**லங்கா மஹறால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

MoneyGram Ria

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ...

**077 839 3974** (சி-0199)


**ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் - 27.04.2024 (சனிக்கிழமை)**

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் 27.04.2024 சனிக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் கீழ்க் குறிப்பிட்ட விவரப்படி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் |
|---|---|---|---|---|
| 1 | 94 | ஊர்காவற்றுறை | அண்ணா சன சமூக நிலையம் உப்புக்குள வீதி ஊர்காவற்றுறை. | க.வக்ஷன் |
| 2 | 95 | ஒழுவில் | போத்தல் அடைப்பு நிலையம் நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை | ஜெ.சதீஸ் |
| 3 | 96 | நாரந்தனை தெற்கு | அண்ணா சன சமூக நிலையம் நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை | பா.ரூபராஜ் |
| 4 | 99 | எழுவைதீவு | பொதுமண்டபம் எழுவைதீவு | இ.கஜெந்தன் |
| 5 | 101 | முகாம் வீதி | அண்ணா முன்பள்ளி நிலையம் உப்புக்குள வீதி ஊர்காவற்றுறை | அ.வசிகரன் |
| 6 | 102 | நாரந்தனை வடக்கு | சங்க தலைமை அலுவலக மண்டபம் ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை. | த.கண்ணதாசன் |
| 7 | 103 | நாரந்தனை கிழக்கு | யா/நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறை | இ.வேல்குமார் |

**ஊர்காவற்றுறை ப.தெ.வ.அபி.**
**கூட்டுறவுச் சங்கம்,**
**ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.** (536)

**திரு.தீ.அ.பெர்னாண்டோ**
**கௌரவ செயலாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

**ஜாதகர்**

மகர ராசியின் அதிபதி சனி. இந்த தமிழ் புது வருடத்தில், அவர் 2 ஆம் இடத்தில் அமர்ந் துள்ளார். கூடவே லாபாதிபதி செவ்வாயும். எனவே இந்த வருடம் காசு, பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். அதோடு உங்களின் எண்ணங்கள் அனைத்தும் அழகாக நிறை வேறும். இது முக்கிய மல்லவா. ஒரு மனிதனின் ஆசைகள் ஈடேறும்போது அவன் பன் மடங்கு மகிழ்ச்சி அடை வான்.

அது இந்த வருடம் உங்க ளுக்கு கிடைக்கும். இந்த மகர ராசி யினர், பேசுவதற்கே ரொம்ப யோசிப்பர். வீண் பழி வந்து விடுமோ என்னும் அச்சமும், கொஞ்சம் மந்த குணமும் உண்டு. 2 ஆம் அதிபதி சனி என்பதால் இவ்விதம் இருக்கும். ஆனால் இந்த வருடம் வெட்டு ஒன்று, துண்டு நூறு எனும் விதத்தில் பேசி கலங்கடிப்பார். இதற்கு 2 ஆம் இடத்தில் அமர்ந்துள்ள செவ்வாய் காரண மாவார்.

**தனம்**

எப்போதும் பணத்துக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடு க்காத ராசி மகர ராசி. ஆனால், இந்த வருடம் 2 ஆம் இடத்தில் அமர்ந்த செவ்வாய், இந்த மகர ராசியினரை பணம் சம்பாதிச் சால்தான் ஆச்சு என அடம் பிடிப்பார். இந்த செவ்வாய் தரும் அதீத நச்சரிப்பால் இவர்களும் பணம் பற்றி ரொம்ப பேசுவார் கள்.

**வாக்கு:** ரொம்ப பேசும் வழ க்கமில்லாத இந்த மகர ராசி யினர் இப்போது வள் வள் என பேசுவர். பேச்சில் காரம் அதிகம் இருக்கும். உங்கள் எண்ணம் ஈடேறும் முயற்சியில் வரும் தடைகளை உங்களின் கோப சொற்கள் உடைத்தெறிந்து விடும். உங்கள் சொற்களின் காத்ரம் உங்களின் வரமாகவும் இருக்கக்கூடும்.

**நோய்**

இந்த வருடம் மகர ராசியின ருக்கு கண்டிப்பாக தோள்பட்டை, கைகளில் வலி பின்னி எடுக்கும். வெகுசிலர் பாத வலியால் சிரமப் படுவர். மருந்து எடுத்துக் கொண் டால் போவதுபோல் போய்விட்டு, திரும்பவந்து வலி எடுக்கும். கூடியமட்டும் இயற்கை மருத்து வத்தை பின்பற்றுங்கள்.

**எதிரிகள்:** நீங்களும் உங் கள் எதிரிகளும் சமபலத்துடன் இருப்பீர்கள். குறிப்பாக உங்கள்



மகரம்

இளைய சகோதரியுடன் சண்டை வர வாய்ப்பு அதிகம்.

**வழக்கு:** உங்கள் மீதுள்ள வழக்குகள் நிறைய இயரிங் முடிந்தாலும், தீர்ப்பு மட்டும் இழுத்துக் கொண்டே போகும். வழக்கு ஜெயிச்சுதா- இல்லையா எனத் தெரியாமல் முழித்துக் கொண்டிருக்க நேரிடும்.

**வேலை:** வேலையில் சேர் வதற்கான ஆர்டர் கிடைத்து விடும். ஆனால் அதற்குரிய விடுப்பு ஆணை அல்லது மற்றய முக்கிய தகவல், தரவுகள் வந்து சேர தாமதம் ஆவதால், வேலை ஒப்பந்த கையெழுத்து போட கால தாமதம் ஆகும்.

**திருமணம்**

திருமணம் நடக்கும். ஒன்று சண்டையுடன் நடக்கும். அல்லது தாய்மாமன் மகளோடு நடக்கும். சிலர்கொஞ்சம் பிரிவு வேறான திருமணம் செய்து கொள்வர். திருமணம் நிறையகடன் வாங் கச் சொல்லும்.

**எதிர்பாராத இடையூறு**

ஒரு ஜாதகருக்கு துன்பம், கவலை, இடையூறு என இவ் வித பலன்களை தரும் வீடு 8 ஆம் வீடுதான். இதன் அதிபர் பலமின்றி இருப்பதுதான் நல் லது. ஆனால் இந்த வருடம் மகர ராசியின் 8 ஆம் அதிபதி உச்சம் பெற்று அமர்ந்து கூடவே 3, 12 ஆம் அதிபதி குரு சேர்ந்திருப் பது இரு மடங்கு கெடுதலா கும்.

துன்பமும் விரயமும் சேர்ந்து நிற்கிறார்கள். இவர்கள் இருக்கு மிடம் 4 ஆம் இடம். எனவே வீடு, தாயார் இவை சம்பந்த மான துன்பங்களே அதிகம் உண்டாகும். கவனம் தேவை வாகன பயணம் ஜாக்கிரதை.

**அதிஷ்டம்**

அதிஷ்ட அதிபதி புதன் நீச பங்கமாகி உள்ளார். எனவே இவர்களின் அதிஷ்டம் சற்று பின் வாங்கி, பின் முன்வந்து நிற் கும். உங்களுக்கு உங்களின் 5 ஆம் அதிபதியும் 9 ஆம் அதி பதியும் சேர்ந்து உள்ளனர்.



இவர்கள் 3 ஆம் வீட்டில் ராகு வுடன் நிற்கின்றனர். எனவே சற்று எதிர்மறையோடு வெற்றி கிடைக்கும். 3 ஆம் வீட்டை உபஜய ஸ்தானம் என்பர்.

இளைய சகோதரரும் யோகம் தருவார். உங்களின் ஆய்வுகள் அதிர்ஷ்டம் கொண்டு வரும். உங்கள் வேலையில் ஒரு யோக நிகழ்வுண்டு. உங் களின் சில ஒப்பந்தங்கள் மிக மேன்மை கொண்டு வரும். வீடு வாங்கி விற்கும் நிறுவனத் திற்கு நல்லதிஷ்டம் கிடைக்கப் போகிறது.

**தொழில்**

தொழில் ஸ்தானாதிபதி சுக் கிரன் உச்சம். எனவே தொழில் சார்ந்த நல்ல செய்திகள் கிடை க்கும். கிடைக்கும் தரவுகள் உங்கள் தொழிலை ஒருபடி முன்னேற்றும்.

**லாபம்**

உங்கள் லாபாதிபதி, காசு பண வீட்டில் உள்ளார். எனவே இந்த வருடம் உங்க ளின் பணவரவு அதிகரிக்கும். சிலர் வீடு, மனையைவிற்கும் போது, நீங்கள் எதிர்பார்த்ததைவிட அதிக லாபம் சேரும். எனவே இந்த வருடம் பணத்தைப் பற்றி கொஞ்சமும் கவலைப்பட வேண் டாம்.

**விரயம்**

செலவுகள் அதிகமாக ஆகும். நீங்கள் பயணங்களை கூடியளவு கட்டுபடுத்துவது நல்லது. சூரிய பகவானை நன்கு வேண்டிக்கொள்ளவும். ஏனெனில் உங்கள் அலை ச்சலின் நோக்கம் சுபமாக இரு க்க வேண்டுமல்லா!

இந்த வருடம், மகர ராசி யினருக்கு நன்மையும் அதி கமாக இருக்கிறது. தீமையும் அதிகமாக இருக்கிறது. எனவே நீங்கள் 50 சத விகி தம் மதிப்பெண் பெறுகிறீர்கள்.

**பரிகாரம்**

சூரியவழிபாடு கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். சனி + செவ்வாய் சேர்க்கைக்கு, சனிக்கிழமை கருங்குவளை மாலை, கருப்பு திராட்சை, உடன் அகல் விளக்கில் நீல நிறத்துணியில் 26 மிளகைப் பொட்டலம் கட்டி, நல்லெண் ணெய் ஊற்றி, நீலநிறத் துணி யில் தீபமேற்றவும்.

எப்போது கோவிலுக்கு சென்றாலும். சூரியன், சிவன், கருடன் என முடிந்த போதெ ல்லாம் தீபமேற்றி வழிபடு ங்கள். அது நல்லெண்ணெய் அகல் அல்லது நெய் நிரப்பிய அகல் எதுவானாலும் சரிதான். தீபமேற்றுங்கள். உச்சமாகிய 8 ஆம் இட சூரியன்+ 12 ஆம் இட குருவின் சேர்க்கையிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

# இராசிபலன்

**25.04.2024**
**சித்திரை 12, வியாழக்கிழமை**
**பிரதமை காலை 6.45 மணிவரை**

**விசாகம் பின்னிரவு 02.03 மணிவரை**
**சுபநேரம் 07.30-9.00 மணிவரை**
**இராகுகாலம் 01.30- 3.00 மணிவரை**

**சதுர்த்தி விரதம்**
**சந்திராஷ்டமம்,உத்திரட்டாதி**

**வளவன்**



மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்,பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்,விருப்பங்கள் நிறைவேறும் நாள்,உடல் நலன் சீராகும்.



கடகம்

மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும்,நினைத்தது நிறைவேறும் வாய்ப்புண்டு,செய்தொழில் மேன்மையுண்டு,போசன சுகமுண்டு.



துலாம்

குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பெரியவர்கள் அனுகூலமாக நடந்து கொள்வர்,காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.



மகரம்

சொன்னசொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால்மகிழ்ச்சி கூடும்,எதிர்பாராதநேரத்தில் பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்,வருமானம் திருப்தி தரும்.



ரிஷபம்

நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, தொழில் வளர்ச்சி உண்டு.



சிம்மம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், நண்பர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்,மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,காரிய அனுகூலமுண்டு.



விருச்சிகம்

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,சேமிப்பு உயரும் நாள்,சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.



கும்பம்

தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், வீண்பழிகள் அகலும், தொலைபேசித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், விருந்தினர்கள் சந்திப்பு இடம் பெறலாம்.



மிதுனம்

மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.



கன்னி

தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது,ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை கூடும்,வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்,வாக்கு மேன்மையுண்டு.



தனுசு

தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும்,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.



மீனம்

கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விருந்தினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது போல நூல்களையும் தேர்ந்து எடுத்துப் படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**கலைப்பீடம்** - பேராசிரியர்கள் கே.கைலாசபதி, கே.இந்திரபாலா, எஸ்.வித்தியானந்தன், எஸ்.இராசரெத்தினம், எஸ்.செல்வநாயகம், கே.சிவத்தம்பி, ஏ.சண்முகதாஸ், பி.பாலசுந்தரம்பிள்ளை, எஸ்.சுசீந்திரராஜா, வீ.ஆறுமுகம், பி.சந்திரசேகரம், எஸ்.பாலச்சந்திரன், வி.நித்தியானந்தன், வி.இராமகிருஷ்ணன், கே.சின்னத்தம்பி, எஸ்.வேலாயுதம், வி.சிவசாமி, லூதர் ஜெயசிங்கம், ஆர் மதனாகரன், சி.முருகவேள், திருமதி பரராஜசிங்கம், கலாநிதி கருணாநந்தன், என்.முத்துத்தம்பி.

**மருத்துவபீடம்** - பேராசிரியர்கள் ஏ.ஏ.ஹூவர், பி.கனகசுந்தரம், எஸ்.சிவஞானசுந்தரம், எம்.சிவசூர்யா, என்.ஸ்ரீகரன், எஸ்.சரவணபவன், திருமதி சரவணபவன், எஸ்.வி.பரமேஸ்வரன், செல்வி பாலசிங்கம், கருணைநாதன், இராமதாஸ், கே.இராமசாமி, கே.பாலசுப்பிரமணியம், என்.சிவராசா, திருமதி கணேசமூர்த்தி.

மேற்குறிப்பிட்டவர்களில் ஒரு பகுதியினர் இங்கு வருமுன்னே பேராசிரியர்களாக இருந்தவர்கள், இன்னொரு பிரிவினர் இங்கு பேராசிரியர் பதவி பெற்று வந்தவர்கள், மற்றையவர்கள் இங்கு வந்து சில காலங்களுள் பேராசிரியர் பதவி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் உதவி விரிவுரையாளர்களாகவும் தற்காலிக விரிவுரையாளர்களாகவும் இருந்த பலர் இங்கு உதவி விரிவுரையாளர் பதவிகளை நிரப்புவதற்குத் தகுதியுடையவர்களாக இருந்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளராக இருந்த திரு.செல்வநாயகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைந்து ஆரம்பத்தில் மிகச் சிறந்த பணிகளை ஆற்றியிருந்தார். இவரது சேவையைக் கௌரவித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் முதலாவது பட்டமளிப்பு விழாவில் அவருக்குக் கௌரவப் பட்டம் வழங்கியது. இவர்போல் நீண்டகாலம் பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் பதவிநிலை நிர்வாகியாகக் கடமையாற்றிய திரு.காசிநாதனுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவப்பட்டம் வழங்கியது. மேலும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தொழில்நுட்பவியலாளர்களாக இருந்த பலர் இடமாற்றம் பெற்று இங்கு வருகை தந்தனர்.

**கல்வி வளர்ச்சியும் பீடங்களும்**

ஆரம்பத்தில் மானிடவியல் பீடமும், விஞ்ஞான பீடமுமே இருந்தன. மானிடவியல் பீடத்தில் ஆரம்பத்தில் இந்துநாகரீகம், தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, புவியியல் மற்றும் பொருளியல் பாடங்கள் மாத்திரமே கற்பிக்கப் பட்டன. பின் காலவோட்டத்துடன் பல புதிய பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

**கலைப்பீடம்**

01.01.1979 இலிருந்து மானிடவியல் பீடம் கலைப்பீடமாகப் பெயர் மாற்றம் பெற்றது. இன்று கலைப் பீடத்தில் தமிழ், இந்துநாகரீகம், சமஸ்கிருதம், புவியியல், பொருளியல், அரசறிவியல், சமூகவியல், மானிடவியல், உளவியல், மொழியியல், கிறிஸ்தவ நாகரீகம், நாடகமும் அரங்கியலும், நுண்கலை, வரலாறு, ஆங்கில இலக்கியம், இரண்டாவது மொழியாக ஆங்கிலம், மனைப்பொருளியல், சமுதாய-பிராந்தியத் திட்டமிடல், கல்வி, ஊடகவியல், தொல்லியல், கலாச் சாரச்சுற்றுலா மற்றும் மொழி பெயர்ப்பியல் ஆகிய பாடங்கள், கற்பிக்கப்படுகின்றன. இப்பாடங்களில் பொதுக்கலை மற்றும் சிறப்புக்கலைப் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ள முடியும். மேலும் கலைப்பீடத்திற்குள் நிர்வாக நோக்கத்திற்காக சட்டத் துறையும் 2009 இல் உருவாக்கப்பட்டது. சட்டத்துறைக்கு சராசரியாக 100 மாணவர்கள் நேரடியாக அனுமதிக்கப்படுகிறார்கள். இலங்கையில் வேறு எந்தக் கலைப்பீடத்திலும் பார்க்க இங்கு கூடியளவு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. பீடத்தின் பீடாதிபதிகளாக பல முன்னணிப் பேராசிரியர்களான கே.இந்திரபாலா, கே.கைலாசநாதக்குருக்கள், எஸ்.கம்லேட், டபிள்யு.எல்.ஜெயசிங்க, எஸ்.இராசரட்ணம், கே.கைலாசபதி, என்.பாலகிருஸ்ணன், பி.பாலசுந்தரம்பிள்ளை, ஏ.சண்முகதாஸ், எஸ்.பாலச்சந்திரன், பி.கோபாலகிருஸ்ணஐயர், ஆர்.சிவச்சந்திரன், எஸ்.கிருஸ்ணராசா, என்.ஞானக்குமார், வி.பி.சிவநாதன், கே.சுதாகர் ஆகியோர் பீடத்தை வழிநடத்தினர். இன்று பேராசிரியர்.எஸ்.ரகுராம் பீடாதிபதியாகக் கடமையாற்றுகின்றார். அதிக பாடங்களை அறிமுகம் செய்ததில் பீடாதிபதிகளாக விருந்த கே.இந்திரபாலா, பி.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இப்பீடத்திற்கு வருடாந்தம் 650 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கப்படுகின்றனர்.

**விஞ்ஞானபீடம்**

விஞ்ஞானபீடம் ஆரம்பத்தில் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் துறைகளைக் கொண்டிருந்தது. 1991 இல் இங்கு கணனித்துறையும் 2017 இல் மீன்பிடியியல் துறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பீடம் மிகவும் தகுதி வாய்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்களையும், சிறந்த உட்கட்டுமானங்களையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆராய்ச்சித் துறைகளிலும் இப்பீடப் பேராசிரியர்கள் முன்னிலை வகிக்கின்றார்கள். இப்பீடம் மிகச்சிறந்த பட்டதாரிகளை உருவாக்கியுள்ளதுடன் அவர்களில் பலர் பல்வேறு நாடுகளில் பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சி நிறுவனங்களிலும் உயர் பதவி வகிக்கின்றனர் என்பது பெருமைக்குரியது.

இப்பீடத்தின் பீடாதிபதிகளாக பேராசிரியர்கள் பி.கனகசபாபதி, கே.குணரட்ணம், வி.தர்மரட்ணம், வி.கே.கணேசலிங்கம், எஸ்.மகேஸ்வரன், ஆர்.குமாரவடிவேல், கே.கந்தசாமி, எஸ்.சிறீசற்குண ராசா, ஆர்.விக்னேஸ்வரன், பி.ஜெயரட்ணம் ஆகியோர் பதவி வகித்துள்ளனர். இன்று பேராசிரியர் பி.ரவிராஜன் பீடாதிபதியாகக் கடமையாற்றுகின்றார்.



**மருத்துவபீடம்:**

மருத்துவபீடம் 1978 இல் துணைவேந்தர் எஸ்.வித்தியானந்தன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, ஆரம்பத்தில் கைதடியில் இயங்கி பின்னர் 1981 இல் தனது சொந்தக் கட்டடத்தொகுதிக்குக் கொண்டு வரப்பட்டது. மருத்துவ பீடத்தில் 14 துறைகள் இருக்கின்றன. அவையாவன: உடற்கூற்றியல், உடற்தொழிலியல், உயிர் இரசாயனவியல், நுண் உயிரியல், ஒட்டுண்ணியல், சமுதாய குடும்ப மருத்துவவியல், சட்ட மருத்துவம், உளநல மருத்துவவியல், நோயியல், மருந்தியல், பொது மருத்துவவியல், குழந்தை நல மருத்துவம், சத்திர சிகிச்சையியல், பெண் நோயியலும் மகப்பேற்றியலும். மேலும் கதிர் மருத்துவம், மருத்துவக்கல்வி என இரு அலகுகளையும் கொண்டுள்ளது. மருத்துவபீடமும் ஆரம்பத்தில் விரிவுரையாளர் பற்றாக் குறையை எதிர்கொள்ளவில்லை. கொழும்பு, பேராதனை மருத்துவ பீடங்களிலிருந்தும், மருத்துவத் துறையிலிருந்தும் தகுதியான பலர் பீடத்தில் இணைந்ததால் பீடச் செயற்பாடு இலகுவாக இருந்தது. 1983 இற்கு முன்னர் பீடத்தில் இருந்த 13 இருக்கைப் பேராசிரியர்கள் பதவிகள் யாவும் நிரப்பப்பட்டிருந்தன.



பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

இங்கு 5 டாக்டர் தம்பதிகள் கடமையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் டாக்டர் வேற்பிள்ளை, வர்மன், சரவணபவனந்தன், இராமதாஸ், நாகேந்திரா ஆகியோர் ஆவர்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் மற்றும் உள்நாட்டு யுத்தத்தால் பெரும் எண்ணிக்கையான பீட விரிவுரையாளர்கள் விலகிச் சென்றதால் 1990 களில் பீடத்தை இயக்குவது மிகவும் கடினமாக இருந்தது. இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் கொடுத்த ஆதரவில் பீடச்செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடியதாக இருந்தது. இவர்களுள் டாக்டர் திருமதி நாகேந்திரா மற்றும் டாக்டர் கணேசரத்தினத்தின் சேவைகள் மிகவும் பாராட்டுக்குரியன.

பீடம் தற்பொழுது போதிய பேராசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் கொண்டிருப்பதுடன் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை இன்று நூற்றுக்கும் மேற்பட்ட வைத்திய நிபுணர்களைக் கொண்டு வளர்ச்சி பெற்றிருப்பதும் மருத்துவபீடச் செயற்பாட்டிற்குப் பெரும் உதவியாக இருக்கின்றது. இவ்வைத்திய நிபுணர்களில் பெரும்பாலானோர் இப்பீடத்தின் பழைய மாணவர்களாவர். யாழ்ப்பாண மருத்துவபீடத்தின் பட்டதாரிகள் பலர் இன்று அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையில் பணிபுரிவதுடன் தொழில் வாண்மையில் மிகவும் கௌரவத்துக்குரியவர்களாக உள்ளனர். இப்பீட வளர்ச்சியில் பழைய மாணவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்வதும் மகிழ்ச்சிக்குரியது. மேலும் இப்பீடம் உள்ளூர், தேசிய, சர்வதேச ஆய்வுகளில் ஈடுபடுவதும் பங்குகொள்வதும் குறிப்பிடத்தக்கது. இப்பீடத்தின் பீடாதிபதிகளாக பேராசிரியர்கள் ஏ.ஏ.ஹூவர், பி.கனகசுந்தரம் எஸ்.சிவஞானசுந்தரம், கே.பாலசுப்ரமணியம், எஸ்.கே.பரமேஸ்வரன், ஆர்.இராஜேந்திரபிரசாத், வசந்தி அரசரட்ணம், கே.சிவபாலன், எஸ்.பாலக்குமார், எஸ்.ரவிராஜ் ஆகியோர் பதவி வகித்துள்ளனர். இன்று பேராசிரியர் ஆர்.சுரேந்திரகுமார் அவர்கள் பீடாதிபதியாகக் கடமையாற்றுகின்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த பெரும் தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல்



(காசா)

காசாவை அடுத்து ரஃபா மீதான மிகப்பெரும் தாக்குதலுக்காக தயாராகி வருகிறது இஸ்ரேல். இதனால் பாலஸ்தீன மக்கள் மத்தியிலான வேதனை ஓலம் குறையும் என்ற எதிர்ப்பார்ப்புகள் பொய்த்துள்ளன.

கடந்தாண்டு ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீதான ஹமாஸ் ஆயுதக்குழுவின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு, பழிவாங்கத்துடித்த இஸ்ரேலின் பதிலடி இன்னமும் நின்றபாடில்லை. ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலில் 1200 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 250 பேர் கடத்திச் செல்லப்பட்டனர். இதற்கான பழிவாங்கல் தாக்குதல்களில், இஸ்ரேல் இது வரை சுமார் 34,000 பாலஸ்தீனியர்களைக் கொன்று குவித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் சிறார் மற்றும் பெண்களை உள்ளடக்கிய அப்பாவிகள்.

இத்தனை உயிர்ப்பலிகளுக்கு பின்னர் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தணியும், அங்கே அமைதி திரும்பும் என்ற சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பில் மண் விழுந்துள்ளது. காசாவை சிதிலமாக்கிய இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் அடுத்தபடியாக ரஃபா நகரை குறிவைத்துள்ளன. அந்த நகரின் மீதான பெரும் தாக்குதலுக்கு கடந்த சில தினங்களாக இஸ்ரேல் தீவிரமாக தயாராகி வருகிறது.

இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்த ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாக அழித்தொழிப்பது என்ற நோக்கத்தின் அடுத்த கட்டமாக ரஃபா நகரை இஸ்ரேல் குறிவைத்துள்ளது.

கடந்த சில தினங்களாக காசா மீதான தனது இறுதித் தாக்குதலை அதிகரித்து வந்த இஸ்ரேல், அடுத்தபடியாக ரஃபா நோக்கி திரும்புகிறது. இதற்காக கான்யூனிஸ் அருகே புதிய கூடாரங்களை இஸ்ரேல் அமைத்துவருவதை செயற்கைக்கோள் படங்கள் உறுதி செய்துள்ளன. ஆனால் அவற்றை இஸ்ரேல் மறுத்துள்ளது.

அதேவேளையில் தங்கள் மீது ட்ரோன் தாக்குதல்களை நிகழ்த்திய இரானுக்கு இன்னமும் பதிலடி தராது இஸ்ரேல் காலம் தாழ்த்துவதும் மத்திய கிழக்கில் ஆச்சரியத்தை தந்துள்ளது. ஆனால், ஈரான் ஆதரவிலான காசாவின் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் மீது முன்னெப்போதையும் விட அசுரத் தாக்குதலை அதிகரித்துள்ளது. ஈரான் ஆதரவு ஹமாஸ் ஆயுதக் குழுவினர் மீதான தாக்குதலையும், இரானுக்கு எதிரான போர் நடவடிக்கையாகவே இஸ்ரேல் கருதுவதே இதற்கு காரணம்.

இதன்படி பாலஸ்தீன பகுதியில் ஹமாஸ் ஆயுதக் குழுவினரை நிர்மூலம் செய்த பின்னரே, ஈரானுக்கு எதிரான பதிலடியை இஸ்ரேல் பரிசீலிக்கும். ஆனால், ஈரான் ஆதரவு போராளிகளின் சிரியா மற்றும் லெபனான் மீது வழக்கம்போலவே அவ்வபோது தனது தாக்குதலை இஸ்ரேல் தொடரும் எனவும் தெரிய வருகிறது.


இவற்றின் மத்தியில் ரஃபா மீதான இஸ்ரேலின் அடுத்தக்கட்ட தாக்குதல், அப்பாவி மக்கள் மீதான காசா கொடூரத்தை மீண்டும் அங்கே அரங்கேற்றும் அச்சுறுத்தலை தந்துள்ளது. (நி-6)

# சகாரா புழுத

## கிரேக்கத்தின் பல ந

(கிரேக்கம்)

**வடஅமெரிக்காவின் சகாரா புழுதி**
**உட்பட பல நகரங்கள் ஒரேஞ் நிறத்தி**



வட ஆபிரிக்காவிலிருந்து காற்று கொண்டுவந்த மண் காரணமாக கிரேக்கத்தின் தலைநகரம் ஒரேஞ் நிறத்திற்கு மாறியுள்ளது.

மத்தியதரை கடலில் காணப்பட்ட தூசுமேகங்கள் கிரேக்கத்தின் வரலாற்று புகழ்மிக்க பல நகரங்களை சூழ்ந்து கொண்டதால் தெற்கு

# இஸ்ரேலின் தாக்குதலில் 18 குழந்தைகள் உயிரிழப்பு



(காசா)

காசாவில், அண்மையில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில், 18 குழந்தைகள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலானது கடந்த 6 மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது. இந்நிலையில், இஸ்ரேல் இராணுவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்திய வான்வழி தாக்குதலில், காசா பகுதியில் உள்ள மருத்துவமனை அருகே இருந்த கட்டடம் சேதமடைந்தது. குறித்த தாக்குதலில் அக்கட்டடத்தில் தங்கியிருந்த 18 குழந்தைகள், இரண்டு பெண்கள் உட்பட 22 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுவரை நடத்தப்பட்ட தாக்குதலில், 34,000 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கிடையே, காசா மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலுக்கு உதவும் வகையில் கூடுதல் நிதியை அமெரிக்க அரசு ஒதுக்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 5 இலட்சம் இராணுவ வீரர்களை போரில் பறிகொடுத்த உக்ரைன்



(கீவ்)

ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் இதுவரை 5 இலட்சம் இராணுவ வீரர்களை பறிகொடுத்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.


இது குறித்து ரஷ்யாவின் இராணுவ அமைச்சர் செர்ஜி ஷோய்கு கருத்துத் தெரிவிக்கையில் "போர் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை உக்ரைன் இராணுவமானது [illegible] 5 இலட்சம் இராணுவ [illegible]

அத்துடன் உக்ரைன் இராணுவத்தின் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரோன்கள், 1,000 ஏவுகணைகள், சுமார் 900 விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை ரஷ்யா அழித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இடம்பெற்று வரும் போரானது கடந்த 3 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மோனாலிசா ஓவியத்தை

## அருங்காட்சியக ந



(பாரிஸ்)

மோனாலிசா ஓவியம் உலகின் மிகவும் பெருமை வாய்ந்த ஓவியங்களில் ஒன்றாகும்.

லியோனார்டோ டாவின்சியின் புகழ்பெற்ற உருவப்படம் ஒரு பெண்ணின் உருவப்படம் ஆகும். இது உலகில் அதிகம் பார்வையிடப்பட்ட ஓவியமாக காணப்படுகிறது

பார்வை அனுபவத்தை மேம்படுத்த லூவ்ரே அரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழுதிமேகங்களால் ...நகரங்கள் நிறம் மாறின

**...ழுதிமேகங்கள் காரணமாக கிரேக்கத்தின் ஏதென்ஸ் ...த்திற்கு மாறியுள்ளன.**





...கிரேக்கத்தின் மீதான வானம் ...திடீரென ஒரேஞ்சு நிறத்திற்கு ...மாறியது.

சகாரா பாலைவனத்தி ...லிருந்து புழுதியை கடும் காற்று கொண்டுவந்ததே இதற்கு காரணம்.

கடும் காற்று காரணமாக கிரேக்கத்தின் தென்பகுதி களில் காட்டுதீ மூண்டுள் ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 25 காட்டுதீ மூண்டுள்ளதாக தீயணைப்பு பிரிவினர் தெரி வித்துள்ளனர். (நி-6)

## ...தை இனி பார்வையிட முடியாது ...க நிர்வாகம் அறிவிப்பு



...ட்சியகத்தின் முயற்சி ... ஒரு நிலத்தடி ...றக்கு மாற்ற ப்படலாம் ... குறித்த அருங் காட்சி ... தெரிவித்துள்ளது.

...இந்த உருவப்படம் ...போது சாலே டெஸ் ...ாட்ஸின் மையத்தில் ...ட் புரூப் கண்ணா ... பின்னால் காட்சிக்கு ...க்கப்பட்டுள்ளது. ...ன் உறைக்குள் வெப்ப ...ல மற்றும் ஈரப்பதம் ...யம் சிதை வடை யாமல் இருப்பதை உறுதி செய்ய இறுக்கமாக கட்டுப்ப டுத்தப்படுகிறது.

ஆனால் ஒரு சமீபத்திய கணக்கெடுப்பில் சுற்றுலாப் பயணிகள் அந்த ஓவி யத்தின் அனுபவத்தை அனுபவிக்க வில்லை என்பதைக் காட்டுகிறது.

இதன் காரணமாக குறித்த ஓவியத்தை நிலத்தடியில் ஓர் இருட்டு அறைக்குள் சில காலம் வைத்திருக்க அருங்காட் சியக நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக தகவல் கிடைக்கபெற்றுள்ளன

பார்வையாளர்களின் பார்வை அனுபவத்தை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் பாது காப்பு உறை எதிர்ப்பு பிரதி பலிப்பு தொழில் நுட்பத் துடன் மேம்படுத்தப்பட் டது என்பதும் குறிப்பிடத்தக் கது. (நி-6)

## அமெரிக்காவில் விமான விபத்து இருவர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சரக்கு விமானமொன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்திலுள்ள பெர்பேங் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்ட சரக்கு விமானமே இவ்வாறு கீழே விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விமானம் புறப்பட்டு 11 கிலோமீற்றர் தூரம் பயணித்த நிலையிலேயே கீழே விழுந்து தீப்பற்றி யெரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்தில் விமானத்தில் பயணித்த 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார், விமான விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-6)



## இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தீவிரம்





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பல்க லைக்கழகங்களில் இஸ்ரே லிற்கு எதிரான ஆர்ப்பாட் டங்கள் தீவிரமடைந்துள்ளன.

அமெரிக்க பல்கலை கழக ங்களில் இஸ்ரேலிற்கு எதி ரான ஆர்ப்பாட்டங்கள் தீவிர மடைந்துள்ளதை தொடர்ந்து கொலம்பிய பல்கலைக்கழகம் வகுப்பறை கற்றல் செயற்பாடு களை இடைநிறுத்தியுள்ளது. நியூயோர்க் பல்கலைக்கழகத் திலும் யால் பல்கலைக்கழகத் திலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இதேவேளை அமெரிக் காவின் பல பல்கலைக்கழக ங்கள் ஹமாசிற்கு எதிரான இஸ்ரேலின் யுத்தத்தினால் உருவாகியுள்ள பதற்றத்தை குறைப்பதற்கான நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளன.

கொலம்பிய பல்கலைக் கழகத்தின் வெளியே முகா மிட்டிருந்த 100 இற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர் கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை ஏனைய பல்கலைகழகங்களில் கொல ம்பிய பல்கலைகழகத்தில் ஏற்பட்ட நிலை உருவாகியு ள்ளது. நியுயோர்க் பல் கலைகழகத்தில் 100இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல் கலைக்கழத்திற்கு வெளியே முகாமிட்டுள்ளமை குறிப்பிட த்தக்கது (நி-6)

## பாகிஸ்தான் பிரதமரை சந்தித்த ஈரான் ஜனாதிபதி ரைசி



(இஸ்லாமாபாத்)

இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணமாக பாகிஸ்தான் சென்றுள்ள ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கும் பாகிஸ் தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீ ப்புக்கும் இடையிலான சந்திப்பு இஸ்லாமாபாத்தில் நடை பெற்றது.

இருதரப்பு உறவுகளை வலு ப்படுத்திய பின்னர், இரு நாட்டு தலைவர்களும் இஸ்ரேலிய ஹமாஸ் நெருக்கடி குறித்து நீண்ட விவாதங்களை நடத்திய தாக ஊடகங்கள் தெரிவிக்கி ன்றன.

இந்திய-பாகிஸ்தான் காஷ்மீர் நெருக்கடியானது காசா நெரு க்கடிக்கு நிகரானது என ஈரான் ஜனாதிபதி பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப்பிடம் சுட்டிக்காட்டி னார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ஆரம்ப பாடசாலைகளில் வீதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வீதி பாதுகாப்பினை ஒழுங்குபடுத்தும் முகமாக மாகாண மட்டத்தில் வீதிபாதுகாப்பு விழிப்புணர்வு செயற்றிடம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப பாடசாலை மாணவர்கள் நாளைய சமுதாயத்தின் முன்னோடிகள் என்ற வகையில் குறித் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

முதற்கட்டமாக ஆரம்ப பாடசாலைகளில் குறித்த செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்தவகையில் யாழ்.மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் மிக்க யாழ்.இந்து, கொக்குவில் இந்து, யாழ்.மகளிர் ஆகிய ஆரம்ப பாடசாலைகளில் நேற்று காலை 7.30 மணிக்கு வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளராக இ.இளங்கோவன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் ச.கிருஸ்னேந்திரன், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் யாழ்.வலயக்கல்விப் பிரதிப்பணிப்பாளா எம்.தர்மிகா மற்றும் குறித்த பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர். (நி-6)

# அதிவேக நெடுஞ்சாலையில் இதுவரை 99,375 வீதி விபத்துகள்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டதிலிருந்து இதுவரையான 13 வருடங்களில் 99,375 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன.

அவற்றில் 5,292 விபத்துகள் வாகன சாரதிகளின் கவனயீனத்தால் ஏற்பட்டதாக நெடுஞ்சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது. குறித்த விபத்துகளில் 66 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 637 பேர் நிரந்தர உடல்நலப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனம் செலுத்தும் போது அவதானமாக செயற்பட வேண்டும் என நெடுஞ்சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் குழு வாகன சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 140 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 100 | 80-100 | 120 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80-90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100-150 | 140 |
| கோவா | 160 | 160 | 150 | 200 | 250 |
| கரட் | 300 | 400 | 280 | 300 | 400 |
| பூசணி | 120 | 130 | 80 | 90 | 120 |
| புடோல் | 100 | 200 | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 50 | 70-80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 220 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 250 | 230 | 300 |
| பாகற்காய் | 500 | 350 | 300 | 300 | 400 |
| வெண்டைக்காய் | 100 | 120 | 60 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 400 | 200 | 250 | 250-300 | 200 |
| லீக்ஸ் | 320 | 300 | 220 | 220 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 180 | 200 | 250 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 400 | 400-700 | 800 |
| போஞ்சி | 200 | 300 | 300 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 50 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 100 | 60-80 | 100 |
| தேசிக்காய் | 800 | 800 | 500 | 500-750 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 110 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 350 | 300 | 80 | 400 |
| வெங்காயப்பூ | -- | 200 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 50 | 80 | [illegible] |
| ஈரப்பலா | -- | -- | 120 | 100 | -- |

# இன்று ஒரு தகவல் 105



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புன்னகை

எப்பவும் சிரித்த முகத்தோடு இருக்க வேண்டுமாம். அதுதான் நல்லதாம் பெரியவர்கள் எல்லோரும் சொல்லுகின்றார்கள். சொல்லுபவர்களுக்கு என்ன சுலபமாக சொல்லிவிட்டு போய்விடுகின்றார்கள். என்னோட கஷ்டம் எனக்கு அல்லவா தெரியும்! என்று நாம் நினைக்கலாம்.கஷ்டம் இருக்கிறதினாலே முகத்தை உம் என்று வைத்தக் கொள்வதனாலே என்ன பிரயோஜனம்?

சிரித்துக் முகத்தோடு எப்போதும் இருக்க வேண்டும் என்றால் தெருவிலே போகும் போது வரும் போது எல்லாம் சிரித்துக் கொண்டே போக வேண்டும். சிரித்துக் கொண்டு வர வேண்டும் என்று அர்த்தம் இல்லை! அப்படிப் போனால் பார்க்கின்றவர்கள் சந்தேகப்படுவார்கள். முகம் மலர்ச்சியாக இருக்க வேண்டும். உதட்டிலே புன்னகை தவழ வேண்டும் அவ்வளவதான்.

இப்படி இருக்கின்ற மாதிரி நம்மளை நாமே பழக்கப்படுத்திக் கொள்ள முடியும் -என்று சொல்லுகின்றார்கள்... சில நிபுணர்கள்.

சில கடைக்காரர்களை பார்த்திருப்பீர்கள் நீங்கள் ஒரு சோப்பைக் கேட்பீர்கள் நீங்கள் கேட்கின்ற சோப் அவர் கடையில் இருக்காது. அவர் இல்லை என்று சொல்லமாட்டார். வேறு ஒரு சோப்பை எடுத்துக் கொடுத்து இது கூட கேட்கின்ற அந்த சோப் மாதிரியே தான் சார். ஒரு தடவை போட்டுப் பாருங்களேன் என்று புன்னகையோடு சொல்லுவார்.

இதே மாதிரி சில நடிகர்கள் .தரகர்கள் இவர்களைக் கூட நீங்கள் சந்தித்து இருக்கலாம். சிரித்த முகத்தோடு பேசுவார்கள்.

அது எல்லாம் தொழில் ரீதியான புன்னகை. பழக்கத்தினாலே வந்தது. அதே மாதிரி இயல்பான புன்னகையும் நாம் பழக்கத்தினாலே கொண்டு வந்து விடலாமாம். கொஞ்சம் முயற்சி செய்யவேண்டும். அவ்வளவுதான்! உன்மனதிலே உண்டாகின்ற மலர்ச்சி ஒரு புன்னகையாக வந்து உதட்டிலே உட்கார்ந்து இருக்கும்.

இப்போது நீச்சல் பழகிறோம். சைக்கிள் ஓடப் பழகிறோம் அதே மாதிரி புன்னகையோடு இருக்கிறதுக்கும் பழகிக் கொள்ளலாம். மற்ற பயிற்சிகள் எல்லாம் சொல்லிக் கொடுப்பதற்கென்று ஒருவர் தேவை. இந்தப் புன்னகைப் பயிற்சியை வாத்தியார் எல்லாம் வைத்து கற்றுக் கொள்ள முடியாது. இது சொந்தமாக கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பழக்கம்.

வாழ்க்கையிலே ஒரு பிடிப்பில்லாமலே இருக்கிறவர்கள்... மனதை எப்பொழுதும் அமைதியாக வைத்திருக்கிறவர்கள். இவர்களுக்கெல்லாம் முகத்தை புன்னகையோட வைத்துக் கொள்வது சுலபமாம். எப்போதும் புன்னகை தவழகிற முகத்தோடு இருக்கிறாங்களே சில பேர் அவர்களை எல்லாம் தேடிப்பிடித்து ஆராய்ந்து பார்த்தார்கள் அதிலேயிருந்து என்ன தெரிய வந்தது என்றால்... அவர்கள் எல்லாம் எந்த சூழ்நிலையிலேயும் அமைதியாக இருக்கப் பழகி இருக்கிறார்கள். என்ன தான் கஷ்டம் வந்தாலும் அதற்குப் பரிகாரம் என்ன என்று பார்ப்பார்களே தவிர சும்மா படபடத்துக் கொண்டு இருக்கிறதில்லை. வாழ்க்கையிலே ஒரு யதார்த்தமான அணுகுமுறையை கடைப்பிடிக்கிறார்கள். அதனாலே அவர்களுக்கு எந்த தொந்தரவும் வருவதில்லை. இவ்வளவு வசதிகள் இருக்கின்ற போது நாமளும் ஏன் இந்தப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளக் கூடாது.

முக்கியமாக பெண்களுக்கு இது ரொம்ப அவசியம். அவர்களுக்கு காதிலே நகை இருக்கிறது! மூக்கிலே நகை இருக்கிறது! கழுத்திலே நகை இருக்கிறது. அழகாகத் தான் இருக்கிறது ஆனால் உதட்டிலே இருக்க வேண்டிய நகை இல்லை என்றால் மற்ற அழகுக்கெல்லாம் மதிப்பு இல்லாமல் போய்விடும். அது தான் புன்னகையோட மதிப்பு. இந்த நகை கடையிலே விற்றால் வாங்கியாவது கொடுத்து விடலாம். இல்லையே! ன்ன செய்வது? வெளி அலங்காரத்திலே இருக்கின்ற ஆர்வம் உள் அலங்காரத்திலே இருக்கிறதில்லை! Inner personality யை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் வந்துவிட்டால் ஒரு Inner peace வந்து விடுமாம். அது வந்து விட்டால் பின்பு அது புன்னகையாக வந்து முகத்திலே உட்கார்ந்து இருக்குமாம். இது எல்லாம் அனுபவசாலிகள் சொன்ன விபரங்கள். புன்னகையிலேயே தெய்வீகப் புன்னகை ரொம்ப உயர்ந்தது. அது எல்லோருக்கும் சுலபமாக வந்து விடாது. காந்திஜி முகத்திலே அது இருந்தது. ஸ்ரீ இராமகிருஷ்ணர் முகத்திலே அது இருந்தது.

சுமை எவ்வளவு அதிகமாக இருந்தால் கூட நகைச்சுவை உணர்வு இருக்கிறவர்களுக்கு அது கனமாகத் தெரியாதாம்! இலேசாக இருக்குமாம்.காந்திஜிக்கு மனதிலே எவ்வளவு சுமைகள்... பிரச்சினைகள்? இருந்தாலும் அவர் முகத்திலே எரிச்சல் தெரிந்ததா? கோபம் தெரிந்ததா? கோபமாக இருக்கிற காந்திஜி முகத்தை உங்களாலே கற்பனை செய்தாவது பார்க்க முடியுதா? முடியலையே ஏன்? அதற்குக் காரணம் அவரிடம் இருந்த நகைச்சுவை உணர்வு தான்! எனக்கு இந்த நகைச்சுவை உணர்வு மட்டும் இல்லை என்றால் நான் எப்பவே தற்கொலை செய்து இருப்பன் சேர் என்றார் அவர்.

ஒரு சமயம் காந்திஜி ஆசிரமத்திற்கு ஒருவர் வந்தார். வந்தவர் சரியான அறுவைப் பேர்வழி வளவள என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டே இருப்பார். அன்றைக்கு அவர் பாலைப்பற்றி பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்.பால் என்றால் என்ன? பசும் பால் எப்படி? எருமைப்பால் எப்படி? அது இரண்டு பாலுக்கும் என்ன வித்தியாசம் என்று விளக்கம் கொடுக்க ஆரம்பித்து விட்டார். காந்திஜி பொறுமையாக உட்கார்ந்து அதை கேட்க ஆரம்பித்தார். ஆனால் பக்கத்திலே இருந்தவர்களாலே அதை சகித்துக் கொள்ள முடியவில்லை! பல்லை கடித்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தார்கள். அந்த ஆசாமி தொடர்ந்து பேசிக் கொண்டே போனார். எருமை இருக்கே அது கொடுக்கின்ற எருமைப்பால் அதை சாப்பிட்டால் நமது குணம் எருமை மாதிரியே ஆயிடும். மந்த புத்தி வந்து விடும். மசமச என்று ஆகிவிடுவோம். பசு கொடுக்கின்ற பசும் பால் அதை சாப்பிட்டால் நாமலும் பசு மாதிரியே சாதுவாயிடுவோம் இப்படி அடுக்கிட்டே போனார். மற்றவர்களாலே தாங்கிக் ொள்ள முடியவில்லை. இதை புரிந்து கொண்ட காந்திஜி சரியான நேரத்திலே குறுக்கிட்டு அந்த ஆளுகிட்டே இப்படி சொன்னார்: இதே பாருங்கள் நான்ஆட்டுப் ாபல் சாப்பிட்டுக் கொண்டு வருகின்றேன் அதனாலே நீங்கள் இன்னமும் பேசினால்... உங்களை முட்டினாலும் முட்டிப்புடுவேன்! என்றார். பேசினவர் உட்பட எல்லோரும் சிரித்து விட்டார்கள். இந்த நகைச்சுவை உணர்வு தான் அவர் முகத்திலே நிலையாக இருக்கின்ற புன்னகைக்கு காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட செயலகம் நடத்திய கயிறு இழுத்தல் போட்டி


உடுவில் பிரதேச செயலகம் ஆண்கள் பிரிவில் முதலிடம்


கோப்பாய் பிரதேச செயலகம் பெண்கள் பிரிவில் முதலிடம்.

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம் நடத்திய பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட செயலகம் நடத்திய பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான கயிறு இழுத்தல் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றனர். பெண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும் உடுவில் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

# முல்லையில் யூடோ போட்டி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மட்ட யூடோ போட்டி கடந்த திங்கட்கிழமை மாவட்ட உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு யூடோ போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் மாவட்டத்தின் ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொண்டனர்.

போட்டியில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ந.முகுந்தன், மாவட்ட பயிற்றுவிப்பாளர் இ.சகிதரசீலன், மல்யுத்த பயிற்றுவிப்பாளர் ஜெயதர்சன், கராத்தே பயிற்றுவிப்பாளர் தேசிந்தன் மற்றும் விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3098

### நரேன்





### ராகவி




### கவிப்பிரியா




### குணேஸ்




### ரவி




### தாரணி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவைகளை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 464





இளவரசர் அக்கணமே போவதென்று தீர்மானித்து விட்டார். மற்றவர்களும் தம்முடன் வரலாமா என்று கேட்கச் சொன்னார். ஊமை ராணி சிறிது யோசித்து விட்டு, சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

போகும்போது எல்லோரும் அவள் ஏறி வந்த குதிரையைப் பற்றியே பேசிக் கொண்டு போனார்கள். அது அரபு நாட்டிலிருந்து வந்த அற்புதமான உயர் ஜாதிக் குதிரை இந்த மூதாட்டிக்கு எப்படிக் கிடைத்தது? சமீப காலத்தில் இந்தப் பிரதேசத்தில் சைன்யம் எதுவும் வந்து இறங்கவில்லை போர் ஒன்றும் நடக்கவில்லை. அப்படியிருக்கும்போது இக்குதிரை இந்தப் பெண்மணிக்கு எப்படிக் கிடைத்திருக்க முடியும்.

தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தின் அருகில் சோழ நாட்டுக் கப்பல் ஒன்று கரைதட்டிப் புதைந்திருந்ததைப் பார்த்தோம். அங்கிருந்து சிறிது தூரம் வரையில் இலங்கைத் தீவின் கரை தென்கிழக்குத் திசையாக வளைந்து நெளிந்து சென்றது. அடிக்கடி கடல் நீர் பூமிக்குள் சிறிய நீர் நிலைகளையும் பெரிய நீர்நிலைகளையும் உண்டாக்கியிருந்தது. இத்தகைய வளைகுடா ஒன்றுக்குள்ளிருந்து தான் வந்தியத்தேவன் முதலியவர்கள் அன்று காலையில் பார்த்த கப்பல் வெளியே வந்து கடலில் சென்றது.

இப்போது ஊமை ராணி தென்கிழக்குத் திசையிலே அவர்களை அழைத்துக் கொண்டு சென்றாள். அடர்ந்த காட்டுக்குள்ளே புகுந்து சென்றாள். போகப் போக இளவரசரின் ஆர்வம் அதிகமாயிற்று ஏதோ ஒரு முக்கியமான சம்பவம் நடந்திருக்க வேண்டும் இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் நம்மை இம்மூதாட்டி அழைத்துப் போக மாட்டாள் என்று எண்ணினார். திடீரென்று அச்சம்பவம் அவர்களுடைய கண் முன்னால் வந்து நின்றது!

காட்டில் சிறிது இடைவெளி ஏற்பட்டது. நீர் நிலை ஒன்று தெரிந்தது. அதன் கரையில் மனிதர்கள் சிலர் இறந்து கிடந்தார்கள். பிணங்களின் நாற்றத்தோடு காய்ந்து போன மனித இரத்தத்தின் நாற்றமும் கலந்து வந்தது. எத்தனையோ போர்க்களங்களின் அனுபவம் பெற்ற அந்த மனிதர்களுக்கு உயிரில்லா மனித உடல்களும் காய்ந்த இரத்தமும் புதிய அனுபவங்கள் அல்ல. எனினும், ஏதோ அதிசயமான, மர்ம பயங்கரமான காரியம் இங்கே நடந்திருக்கிறது என்ற எண்ணம் எல்லாருடைய மனத்திலும் ஆர்வத்தோடு அருவருப்பையும் உண்டாக்கியது.

அருகிலே சென்று பார்த்தால் உயிரற்றுக் கிடந்த உடல்கள் எல்லாம் தமிழ் நாட்டு மாலுமிகள் உடல்கள் என்று தெரிய வந்தது.

“சீக்கிரம்! சீக்கிரம் யாருக்காவது இன்னும் உயிர் இருக்கிறதா என்று பாருங்கள்!” என்று இளவரசர் கூவினார்.

அவருடன் வந்தவர்கள் ஒவ்வொரு உடலுக்கு அருகிலும் சென்று பரிசோதிக்கத் தொடங்கினார்கள்.


இளவரசரை ஊமை ராணி மறுபடியும் கையினால் சமிக்ஞை செய்து அழைத்துப் போனாள். உடல்கள் கிடந்த இடத்துக்குச் சிறிது தூரத்துக்கப்பால் இருந்த மரத்தடிக்கு அழைத்துப் போனாள். அந்த மரத்தடியில் ஒரு கோர ஸ்வரூபம் சாய்ந்து படுத்திருந்தது. படுத்திருந்தவன் மனிதன் தான். ஆனால் அதை நம்புவது கஷ்டமாயிருந்தது. உடம்பெல்லாம் காயங்கள். மண்டையில் பட்டிருந்த காயங்களிலிருந்து, இரத்தம் முகத்தில் வழிந்து மிகப் பயங்கரமாகச் செய்திருந்தது. ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அம்மனிதனுடைய முகத்தில் இளவரசரைக் கண்டதும் மலர்ச்சியின் சிறிய அறிகுறி தோன்றியது. அவன் வாய் திறந்து ஏதோ பேச முயன்றான். ஆனால் அவன் வாயிலும் இரத்தமாயிருந்தபடியால் அவனுடைய முகத்தின் கோரம் அதிகம் ஆயிற்று.

இளவரசர் பரபரப்புடன் அவன் அருகில் போய் உட்கார்ந்தார். “சீக்கிரம் தண்ணீர் கொண்டு வாருங்கள்” என்று கத்தினார். அம்மனிதன், “வேண்டாம், இளவரசே! சற்று முன்னால் தான் இந்தப் பெண்மணி தண்ணீர் கொடுத்தாள்.(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எதிர்பாராத விடயங்களை எதிர்கொள்



டேய் மத்தி நான் கீழே விழுந்தவுடன் செத்து போய் இருக்கலாம், ஆனா சின்னதா அடிபட்டுத்தோட தப்பிச்சுகிட்டேன் இதிலிருந்து நம்மள சுத்தி எது நடக்குதோ எல்லாம் நன்மைக்கே. நம்மளையும் மீறி ஏதோ நம்மளை இயக்குதுன்னு நான் முழுமையா நம்புறேன். இதைவிட சிறந்த உதாரணம் நான் உனக்கு காட்டமுடியாதுன்னு சொல்லிட்டு மத்தியை மேல நிமிந்து பார்க்குது. அவ்வோலோதான். ஒரு வினாடி தலையே சுத்திருச்சு.

மத்தி அணிலோட பக்கத்துல ஆவலோட பெரிய பாம்பு வாயை ஆன்னு பிடிக்க ஆயத்தமா இருக்கு. டேய் மத்தி மத்தி கிழே வாடான்னு கத்துறதுக்குள்ள லபக்குன்னு அந்த பாம்பு மத்தியை முழுங்கிடுச்சு. ஒரு நிமிடத்துக்குள்ள எல்லாம் மாயமாய் நடந்து முடிந்தது.

அதை பார்த்த புத்திக்கு கால் எல்லாம் வெட வெடன்னு ஆட ஆரம்பிச்சுது. என் நண்பன் என் கண் முன்னாடி இப்படி போய்ட்டேனேன்னு பயங்கரமா அழுக ஆரம்பிச்சு புத்தி. இவோல பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றிய கடவுளுக்கு நன்றி சொன்னான்.

நம்மை சுற்றி நடக்குற எல்லா இன்ப துன்பங்களுக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கும், எல்லாம் நன்மைக்கே என சொல்லிட்டு மத்தியை நினைத்து சோகத்துடன் காட்டுக்குள் சென்று விட்டது.

இதுபோல தான் நம்ம வாழக்கையும் திட்டமிடல் எப்போதும் இருக்கணும். அதே போல ரொம்ப கவனமாகவும் இருக்கணும். அதையும் மீறி ஏதோ ஒன்னு நம்மளை இயக்குது எப்பவும் முன்னெச்செரிக்கையா இருக்கணும். எதிர்பாராத விடயங்களை கண்டிப்பா நாம எதிர்கொண்டுதான் ஆகணும்.

இப்படி நடந்து போச்சேன்னு உட்கார்ந்து வருத்தபடுவதை விட தலைக்கு வந்தது தலை பாகையோடு போச்சுன்னு எல்லாம் நன்மைக்கென்னு நம்பிக்கையோட நகர்தல் நலம்.

எதிர்பாரத விஷயங்களை எதிர் கொண்டு வாழ்ந்து தான் பார்ப்போமே.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன் படுத்திக் கொண்டு வெற்றிகாண முயல வேண்டும்.
~ மெகல்லன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனியேனும் ஒற்றுமைப்படாவிடில் எம்மை அந்தக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது!

தமிழ் மக்களின் அரசியல் பலம் எப்படி இருக்கிறது என்று யாரேனும் கேட்டால், அதற்கான பதில் மௌனமாகவே இருக்கும். அந்தளவுக்கு நிலைமை மோசமாயிற்று.

ஆம், ஒரு காலத்தில் தமிழ் அரசியல் என்பது ஒவ்வொரு தமிழனதும் உயிர் மூச்சாக இருந்தது.

நம் தமிழ் மக்கள் கொள்கைகள், கோட்பாடுகள் என அரசியல் ரீதியாகப் பிரிந்து நின்றனராயினும் தாம் தாம் சார்ந்த தமிழ் அரசியல் கட்சிகளை அவர்கள் நேசித்தனர். அந்தக் கட்சிகளுக்காகத் தங்கள் அனைத்து நலன்களையும் இழக்கத் தயாராகியிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய தமிழ் அரசியல் கட்சிகள் வேறுபட்ட கருத்தியலைக் கொண்டிருந்தாலும் அவர்களின் இலக்கு இந்த மண்ணில் தமிழன் உரிமையோடும் சுதந்திரத்தோடும் வாழ வேண்டும் என்பதாகவே இருந்தது.

இவ்வாறு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஏதோவொரு வகையில் அரசியல் கட்சி சார்ந்து நின்றனர். அந்தச் சார்புக்குள் எந்த சுயநலனும் இருக்கவில்லை.

மாறாக, தாம் தாம் சார்ந்த தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த தீர்மானங்களும் அவற்றை அடைவதற்கான வழிவகைகளும் சம்பந்தப்பட்ட பொதுமக்களை ஈர்த்திருந்தன.

ஆனால் அகத்தாலும் புறத்தாலும் தூய்மையான அந்த அரசியல் நாகரிகம் இன்று காணாமல் போய்விட்டது.

அவ்வாறு காணாமல்போவதற்குத் தமிழ் மக்கள் எந்தவ்கையிலும் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் இங்கு நாம் கூறித்தானாக வேண்டும்.

உண்மை. தமிழ் அரசியல் தரப்புகளின் அகிம்சை வழிப் போராட்டம் தோற்றுப்போக, அது விடுதலைப் போராட்டமாக எழுச்சி பெற்றது.

எம் தமிழ் அரசியல் களம் பலம் பெற்றிருந்ததனூடாக உருவாகிய விடுதலைப் போராட்டமும் உச்சம் பெற்றது.

ஆனால் விடுதலைப் போராட்டம் மௌனித்துப்போன கையோடு மீண்டும் ஏலவே இருந்த தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகப் பலமடைந்திருக்க வேண்டும்.

அவ்வாறு பலம் பெற்றிருந்தால், இன்று தமிழர் அரசியல் என்பது யாராலும் தோற்கடிக்க முடியாத, யாராலும் வெல்லப்பட முடியாத அரசியல் வியூகத்தோடு களமாடியிருக்கும்.

என்ன செய்வது நாமே நமக்குப் பகையானோம். நாமே நமக்கு எதிரிகளானோம். நாமே நம்மைத் தூற்றலானோம். நாமே நம்மை அழித்துக் கொண்டோம்.

அதன் விளைவு எஞ்சியதையும் பறிகொடுக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

இதையேனும் உணர்ந்து இருப்பதையேனும் காப்பாற்ற ஒன்றுபட்டால் என்ன? அதுவும் முடியாவிடில் எங்கள் எதிர்காலத்தை அந்தக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது.

# சம்பந்தன், சஜித் தரப்புக்கு பசில் அனுப்பிய தூது

## தோல்வியில் முடிந்த மொட்டு கட்சியின் திட்டம்

### தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

**தென்னிலங்கையில் தற்போது தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு உங்களுக்கு விருப்பமா? என சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தூது அனுப்பியுள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

குறித்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது பாராளுமன்றத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பசில் ராஜபக்ஷ உள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் ஏனைய கட்சிகள் அது தொடர்பில் என்ன நிலைப்பாட்டில் உள்ளன என்று அறிவதற்கு அவருக்கு விருப்பம்..

முதலில் ஐக்கிய மக்கள் சக்திக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தூது அனுப்பி பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு உங்களுக்கு விருப்பமா என்று பசில் வினவியுள்ளார்.

எனினும், எடுத்த எடுப்பிலேயே ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என்று தூது கொண்டு வந்தவரிடம் சஜித் மற்றும் சம்பந்தன் தரப்பினர் செய்தி அனுப்பியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## திருமறைக் கலாமன்றத்தில் சத்திய சோதனை நாடகம்

(யாழ்ப்பாணம்)

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தயாரிப்பில் பேராசிரியர் சி.ஜெய்சங்கரின்நெறியாள்கையில் ம.சண்முகலிங்கத்தின் "சத்திய சோதனை" என்னும் நாடகம் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில்மேடையேற்றப்படவுள்ளது.

நடைமுறைக் கல்வி பற்றிய கேள்வியையும் பொருத்தமான கல்வி முறையின் தேவை பற்றியும் உரையாடலைத் தூண்டும் நாடகமாக இது அமைந்துள்ளது.

நாடக ஆற்றுகையைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (நி-6)

## மன்றில் சாட்சியம் அளித்த நீதிபதி இளஞ்செழியன்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சந்தியில் நீதிபதி இளஞ்செழியன் மற்றும் பொலிஸ் மெய்ப்பாது காவலர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக வழக்கு தொடர்பில் சாட்சியம் அளிப்பதற்கு யாழ்.மேல் நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்திருந்த நிலையில் நேற்று மன்றில் பிரசன்னமான நீதிபதி மா.இளஞ்செழியன் தனது சாட்சியத்தை பதிவு செய்துள்ளார்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணை நடைபெற்ற நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது சாட்சியத்தை மன்றில் தோன்றி பதிவு செய்துள்ளார். அதனை தொடர்ந்து சம்பவத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தரும் தனது சாட்சியத்தை பதிவு செய்துள்ளார். குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் தொடர் விசாரணைகளாக மூன்று நாட்கள் முன்னெடுக்க திகதியிடப்பட்டுள்ளது. (நி-6-33)

## அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

அதிபர், ஆசிரியர்களின் சம்பள கோரிக்கை தொடர்பாக கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது" கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி அரச பாடசாலை ஆசிரியர்கள்-அதிபர்கள் சம்பள அதிகரிப்பு கோரிக்கையினை முன்வைத்து தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நாட்டில் 2 இலட்சத்து 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ளனர். சுமார் 16 ஆயிரம் அதிபர்கள் உள்ளனர்.

ஆசிரியர் சேவை மற்றும் அதிபர் சேவையில் சம்பள பிரச்சினை காணப்படுகின்றது. அதிபர் - ஆசிரியர்களின் சம்பள கோரிக்கை தொடர்பாக பல பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் ஏப்ரல் 18 ஆம் திகதி கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் செயலாளரின் கையொப்பத்துடன் கடிதமொன்று வெளியிடப்பட்டது.

அதிபர், ஆசிரியர் சேவையில் சம்பள பிரச்சினை இல்லை என்றே அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது பாரிய பிரச்சினையாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-6)

### கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் 4 பேர் கைது

(மன்னார்)

மன்னார் வங்காலை பகுதியில் 10 கிலோக் கிராமிற்கும் அதிகளவான கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டதுடன் வான் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

கடற்கடையினர் ரோந்து நடவடிக்கையினை நேற்று முன்தினம் குறித்த பகுதியில் முன்னெடுத்த போதே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 5 பொதிகளில் பொதியிடப்பட்ட 10 கிலோகிராம் 690 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் பெறுமதி 4 மில்லியன் ரூபா என மதிப்பிடப்படுள்ளது.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்கள்4பேர், கைப்பற்றப்பட்ட கேரளக்கஞ்சா மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட வான் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

17

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

மலைநாட்டிலிருந்து ஆங்கிலேயரைத் துரத்திவிட வேண்டுமெனத் திடமாகக் கையாளப்பட்ட முயற்சி, ஒரு நிலையில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பான சூழ்நிலையையும் பெற்றிருந்தது.

அம்முயற்சி சித்தியடைந்திருப்பின் ஆங்கிலேயரின் நிலை, 1803 இல் அவர்கள் அனுபவித்த துன்பங்களிலும் பார்க்கப் பரிதாபகரமானதாக முடிந்திருக்கும்.

தம்மைக் கண்டி நாட்டினுள் வரவழைத்தது அதே பிரதானிகள் தான். கலகத்தை ஏற்படுத்தவும் அதற்குத் தலைமை தாங்கவும் செய்தனர. என்பதைக் கண்டு ஆங்கிலேயர் மனம் புழுங்கினர். 1815 முதல், தாம் பிரதானிகளைச் சமாதானப்படுத்த கைக்கொண்ட முயற்சிகளினால் எவ்வித நன்மையுமில்லை யென்பதையும் அவர்கள் நன்குணர்ந்தனர்.

கண்டிக் கலகம், பிரதானிகளின் செல்வாக்கினையும் அதிகாரங்களையும் தகர்த்தெறிய வேண்டியதன் அவசியத்தை மிகவும் தெளிவாக ஆங்கிலேயருக்கு எடுத்துக் காட்டிற்று. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் காலத்தில் ஒழுங்கான ஆட்சியை ஏற்படுத்துவதற்கு அவர்கள் முட்டுக் கட்டையாக இருந்தது போன்றே ஆங்கிலேயரின் ஆட்சியிலும் இடையூறுகளை விளைவிப்பரென ஆங்கிலேயர் அஞ்சினர்.

அவர்களின் செருக்கும் ஆணவமும் அடக்கியொடுக்கப்பட்ட பின்னரே கண்டியில் ஒழுங்கான ஆட்சி ஏற்படுமென ஆங்கிலேயர் முடிவு செய்தனர். இதற்கிணங்க, 1815 ஆம் ஆண்டின் உடன்படிக்கையை மாற்றியமைக்கத் திட்டமிட்டனர். 1818 நவம்பர் 21 இல், ஒரு புது விஞ்ஞாபனம் பிரகடனம் செய்யப்பட்டது.

### 1818 ஆம் ஆண்டின் புது ஒழுங்குகள்

புது விஞ்ஞாபன பிரகடனத்தின் படி, கண்டி இராச்சியத்தின் பரிபாலன ஏற்பாடுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்கள் செய்யப்பட்டன. இப் புது ஒழுங்குகளின் மிகவும் முக்கிய அம்சம் யாதெனில் பிரதானிகளின் விசாலமான அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டதேயாகும். 9 ஆவது விதி கூறியதாவது "அதிகாரிகள், திசாவைகள், பிரதம தலைமைக்காரர், மற்றும் தலைமைக்காரர் யாவரும் ஆணைச்சபையினர், பிரிட்டிஷ் முகவர் ஆகியோரின் ஆணைகளின் பேரால் மட்டுமே கடமை செய்யக் கடப்பாடுடையர். வேறு வழியில் அவர்கள் செய்தலாகாது".

இச்சட்டத்தின்படி அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கப்படும் என்ற விதியினால் பிரதானிகள், பழைய ஆட்சியாளர் எனும் நிலையையிழந்து, அரசாங்க ஊழியர்கள் என்ற கீழ் நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர்.

கண்டியின் நிர்வாகத் துறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆணைச்சபை தொடர்ந்து இயங்கிய பொழுதும் கண்டி மாகாணங்கள் ஆள்பதியினால் நேர்முகமாகப் பரிபாலிக்க ஆரம்பிக்கப்பட்டன.

கண்டி மாநிலம் பதினொரு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் அரசாங்க முகவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். கண்டிக்கு அருகாமையிலிருந்த ஐந்து பிரிவுகளின் முகவர்கள், தாழ்பிரதேசப் பகுதிகளைப் போன்று கொழும்பிலிருந்த அரசாங்கத்துக்கு பொறுப்பாக்கப்பட்டனர்.

ஏழு கோறளை, சப்பிரகமுவா எனும் இரு பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இராணுவ அதிகாரிகளே முகவர்களாக நியமிக்கப்பட்டனர்.திசாவைகளை நியமிக்கவும் பதவிலிருந்து நீக்கவும் ஆள்பதிக்கு மாத்திரம் உரிமையிருந்தது. ஏனைய சுதேச அதிகாரிகள், பிரித்தானிய ஸ்தானிகரினால் நியமிக்கப்பட்டனர்.

சில மாகாணங்களுக்கு திசாவைகள் நியமிக்கப்பட்டனர். திசாவைகள், இறட்டே மகத்மயாக்கள், ஏனைய கீழ்ப்பட்ட தலைமைக்காரர் யாவரும் புரட்சிக்கு முன் அனுபவித்த அதிகாரங்களை இழந்தவர்களாய் அரசாங்க முகவர்களின் கடும் மேற்பார்வையின் கீழ் சேவை செய்தனர்.

இச் சுதேச அதிகாரிகள் சம்பளம் பெற்றதுடன் தமது நிலபுலங்களை வரிகளின்றி அனுபவித்தனர். குடியானவர்களிடமிருந்து வரிகளை அறவிடும் அதிகாரமும், இராசகாரிய சேவைகளைக் கட்டளையிடும் அதிகாரமும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. 1818 இற்குப் பின் அரசாங்க முகவர்கள் மாத்திரமே இராசகாரிய சேவையைப் பெற அதிகாரம் பெற்றனர்.

அரசாங்க முகவர்கள், திசாவைகளைத் தவிர்ந்த ஏனைய அதிகாரிகளைத் தண்டிக்க, சிறையிலிட, பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்க அதிகாரம் பெற்றனர். திசாவைகளும் தலைமைக்காரரும் தமது நீதியதிகாரங்களையும் இழந்தனர். குடியியல் பாதக வழக்குகளை, முகவர்கள் விசாரணை செய்து தீர்ப்புக் கூறினர்.

இவ்விதமாக, கலகத்துக்கு முன் திசாவைகளும் தலைமைக்காரரும் அனுபவித்து வந்த இறைகளை வசூலித்தல், நீதி, நிர்வாக அதிகாரங்கள் யாவும் கலகத்துக்குப் பின் அரசாங்க முகவர்களின் கைகளுக்கு மாற்றப்பட்டன.

கரையோர மாநிலங்களும் கண்டி மாநிலமும் பிரித்தானிய மன்னனின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த போதிலும் அவ்விரு பிரதேசங்களுக்கும் இரு வகையான பரிபாலன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கண்டி மாநிலம் தனியொரு நிர்வாக அமைப்பின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஆங்கிலேயரின் குடியியற் சேவை

நாட்டு நிர்வாகத்தின் தலைவர் ஆள்பதி பரிபாலனப் பொறுப்பு முழுவதும் குடியியற் சேவையைச் சார்ந்தது. இலங்கைக்கெனப் பிரத்தியோகமான குடியியற் சேவையை ஆரம்பித்தவர் நோத் ஆவர். ஆனால் அச்சேவையை உறுதியான அத்திவாரத்தில் அமைத்த பெருமை மெயிற்லந்துக்கே உரியது. 1808 இல் மெயிற்லந்து குடியியற் சேவையின் தரத்தையும் திறமையையும் அதிகரிக்கப் பல மாற்றங்களைச் செய்தார்.

அவர் ஏற்படுத்திய ஒழுங்குகள் மாற்றமின்றி 1832 வரை நீடித்தன. இக்காலத்தில் குடியியற் சேவையின் அதி உயர் அதிகாரி குடியேற்றச் செயலாளராவர். அவருக்கு அடுத்து முக்கிய உத்தியோகத்தர் குடியேற்றப் பொருளாளராவர். இவ்விருவருக்குப்பின் முக்கியத்துவம் பெற்றவர்கள் மாகாணங்களின் அரசாங்க முகவர்கள் ஆவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அல்லது இரு உதவி முகவர்கள் துணைவராக நியமிக்கப்பட்டனர். உத்தியோகபூர்வ அடிப்படையில் அவர்கள் இறை வருமான அதிகாரிகளாவர். 19 ஆம் நூற்றாண்டில், நீதிபரிபாலனக் கடமைகளையும் அவர்கள் புரிந்தனர்.

நீதி மன்றங்களின் நீதிபதிகளும் குடியியற் சேவையைச் சேர்ந்தவர்கள். இவர்களைத் தவிர, சுங்கம், தபால் இலாக்காக்களின் தலைவர்களாகவும் குடியியற் சேவையாளரே நியமிக்கப்பட்டனர்.

பிரித்தானியர் 1815 இல் கண்டி இராச்சியத்தைப் பிரதானிகளின் உதவியுடன் கைப்பற்றியமையினால், அப்பகுதிகளைப் பிரதானிகளே பரிபாலிக்க பிறவுண்றிக் அனுமதித்தார். ஆனால் கண்டிக் கலகத்தின் பின்னர் அவர், பிரதானிகளின் அதிகாரங்களையும் செல்வாக்கினையும் குறைக்கும் நோக்கமாக குடியியற் சேவையாளரின் தொகையை அதிகரித்து, அவர்களைப் பாமர மக்களுடன் கூடுதலான தொடர்புகள் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தார்.

நீதி பரிபாலன அதிகாரங்களும் பிரதானிகளின் கைகளிலிருந்து முற்றாக நீக்கப்படவே அவர்களுடைய வருமானம் மேலும் குன்றியது. குடியியற் சேவையாளர் பாமர மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதை பாண்ஸும், ஹோட்டனும் ஊக்கப்படுத்தினர்.

மெயிற்லந்து வெகுமதிகளின் மூலம் குடியியற் சேவையாளரைச் சுதேச மொழிகளைக் கற்கச்செய்த ஏற்பாடுகள் நற்பயனை அளிக்கவில்லை. இக்குறையினைப் போக்க 1822 இல் ஆள்பதி பாண்ஸ், ஒரு முக்கியமான திருத்தத்தை அமுல் செய்தார். அவ்வாண்டு குடியியற் சேவையாளர் சிங்களம் அல்லது தமிழில் தேர்ச்சி பெற்றாலன்றி பதவி உயர்வு பெறமாட்டார் எனும் சட்டம் இயற்றப்பட்டது.

1832 இல் ஹோட்டன் குடியியற் சேவையாளர் சிங்களம், தமிழ் எனும் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற வேண்டு மென்ற கட்டாய சட்டத்தை இயற்றினர்.

இவ்விதமாகப் பிரதானிகளின் செல்வாக்குச் சிதைக்கப்பட்டு அதனிடமாக குடியியற் சேவையாளரின் அதிகாரங்கள் விஸ்தரிக்கப்பட்டன. இவ்வாண்டுகளில் குடியியற் சேவையினர் முழுமையாகத் திறமைசாலிகளாக இல்லாவிடினும், தமக்கு ஒப்படைக்கப்பட்ட நிர்வாகக் கருமங்களைக் கிரமமாகவும் கடமையுணர்ச்சியுடனும் நிறைவேற்றினர் என்பதை மறுப்பதற்கில்லை.

உள்ளூர்க் கிராமப்புறங்களில் சேவை புரிந்த அதிகாரிகள், கிராம மக்களுடனும் நிலப்பிரபுக்களுடனும் இலகுவாகவும் சிரமமின்றியும் பழகி அவர்களின் நன்மதிப்பையும் பெற்றனர்.

பெரும்பான்மை யான அதிகாரிகள் சிங்களம் தமிழ் மொழிகளைக் கற்றுப் பாமர மக்க ளின் அபிமானத்தையும் சம்பாதித்த னர். அவர்கள் யாவரும் நேர் மைக்கும், பட்சபாதக மற்ற பரி பாலனத்துக்கும் பெயர் பெற்றதுடன், இலஞ்ச ஊழல்களுக்குத் தலைசாய்க்காதவர்களாகவும் விளங்கினர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மா...

குறைக்கப்படும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால்மாவின் விலை 250 முதல் 300 ரூபாய் வரை குறைக்கப்படும் என தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மாவின் விலை 100 முதல் 130 ரூபாயினால் குறைக்கப்படும் என சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,10)

## குடும்பஸ்தர்...

பள்ளிமுனை மேற்கு, மன்னாரைச் சேர்ந்த யோன் திரவியம் குமரேசன் (வயது- 49) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை காய்ச்சல் ஏற்பட்டதை தொடர்ந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் 21ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று புதன்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10,60)

## படகின்...

பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த தேவராஜா பீரிஸ் என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மன்னார் முத்தரிப்புத்துறையில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற வேளையே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,285)

## இலங்கைக்கு...

"உமா ஓயா" பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் இலங்கை - ஈரான் ஜனாதிபதிகளால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டதையடுத்து உரையாற்றும் போதே ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மேற்கண்டவாறு தெரிவித்தார்

இங்கு கருத்துத் தெரிவித்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி,

இந்த திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் மட்டுமல்ல, ஆசிய வலய நாடுகளுக்கு இடையேயான அதிக பட்ச ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கான அடையாளமாகும்.

இலங்கையுடன் சிறந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல தயாரென உறுதியளித்த ஈரான் ஜனாதிபதி, இலங்கையின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில் நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவத் தயார்.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு எனக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்காக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் ஒருங்கிணைப்பின் அடையாளமாக விளங்கும் இந்நிகழ்வில் பங்கேற்பதை பெருமையாகவும் கருதுகிறேன்.

இந்தத் திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் என்றே கூற வேண்டும். இந்த அற்புதமான பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை இன்று (நேற்று) உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைக்கிறோம்.

ஆனால், நமது இரு நாடுகளுக்கும் ஆசியபிராந்திய நாடுகளுக்கும் இடையே அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை உறுதி செய்வதே இங்கு மிக முக்கியமான விடயம் என்று நான் நம்புகிறேன் என்றார். (ம-7,10)

## உலகின்...

குறித்த இரத்தினக்கல் 15,000 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பதுளையில் கண்டுபிடிக்கப்பட்ட குறித்த இரத்தினக்கல், அறுகோண இரு பிரமிட்டு வடிவம் கொண்டுள்ளதாக அமைந்துள்ளது.

இவ்வகையானது இயற்கையாக ஒளி ஊடுருவக்கூடிய நீல நிற கொருண்டம் என்ற படிகங்களைக் கொண்டுள்ளது.

கொருண்டம் என்பது மிக முக்கியமான இரத்தின வகைகளில் ஒன்றாகும். உலக வளங்களில் கொருண்டம் குடும்பத்தின், மிகப்பெரிய நீல கொருண்டம் இதுவாகும்.

இது உலகின் அரிதான இரத்தினங்களில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## மலேரியா...

போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்தவர்களில் இருந்து அதிக எண்ணிக்கையான மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இறுதியாக 2012 ஆம் ஆண்டில் மலேரியா நோய் பதிவாகியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டு 62 மலேரியா நோயாளர்கள் பதிவாகியிருந்தனர்.

நோயாளர்களில் பெரும்பான்மையானவர்கள் அமைதி காக்கும் கடமைகளுக்குச் சென்ற இராணுவத்தினர் மற்றும் இரத்தினக்கற்கள் வர்த்தகம் செய்யச்சென்றவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மலேரியா தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்என்றும்குறிப்பிட்டார். (ம-7,10)

## இலங்...

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இவ் வழக்கிற்கு 07 எதிராளிகள் பெயரிடப்பட்டுள்ள நிலையில் 2ம்,4ம் எதிராளிகளான தலைவராக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், செயலாளராக தெரிவாகிய ச.குகதாசன் ஆகியோர்களுக்கு சார்பாக ஆஜராகினேன்.

சுமார் மூன்று மணி நேரங்கள் இவ் வழக்கு விவாதிக்கப்பட்டு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

கடந்த பெப்ரவரி 15ம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 29ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு பொதுநலன் கருதி முடிவுக்கு கொண்டு வரவேண்டும். கட்சி யாப்பை மீறியதாக இங்கு எதுவும் சொல்லப்படவில்லை. குறிப்பாக சில விதிகளில் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வழக்கு தொடர்ந்தால் அதனை வெற்றி கொள்ளலாம்.

ஆனால் காலம் செல்லும் இதனால் வழக்கை காலம் சென்ற நிலையில் வெற்றி கொண்டால் தோல்வியாகவே கருதப்படும் எனவும் தெரிவித்தார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.04.24
சீட்டிழுப்பு இலக்கம் 5455
L 7 8 7 8 7 9
அத சம்பத
L 7 8 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 30
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1485
I 14 18 29 36 I
Double Chance 73335

மெகா பவர்
திகதி 24/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1803
E 19 45 49 54 73
52307

லக்சி 7 VIP
திகதி 2024.04.24
சீட்டிழுப்பு இலக்கம் 0281
Z 4 9 0 8 2 4 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3697
சீட்டிழுப்பு திகதி 24.04.2024
F 09 11 26 51
F 43984

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.24
சீட்டிழுப்பு இலக்கம் 0764
சிம்மம் 02 11 23 49 சிம்மம்
48524 16

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.04.2024 வெற்றி வாரம் 163 வர்ணம் பச்சை
Y 7 6 4 1 9 2
26441
அடுத்த சுப்பர் ஜக்பொட் 21,028,140.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2429 வர்ணம் சிவப்பு சீட்டிழுப்பு திகதி 24.04.2024 தினம் புதன்கிழமை
64 71 72 73 D
17229
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,805,992.00
DLB

சனிதா
2024.04.24 வெற்றி வாரம் 4590
42 43 45 59 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,763,373.60
72988
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4141 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.04.24 தினம் புதன்கிழமை
03 07 37 62 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,146,088.40
228568
DLB

கப்ருக
Y 29 03 25 57 65
1605
701298
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 519,005,497.40
24.04.2024 புதன்கிழமை
DLB

ஜயோதா Jayoda
2024.04.24 வெற்றி வாரம் 2019 வர்ணம் மஞ்சள்
04 12 36 56 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,130,058.80
74239
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2255
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2024.04.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 108,085,110.40
20 42 68 69 U
186130
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறிமலை சம்பவம்

# பொலிஸார், வனவளத் திணைக்களத்தினரிடம் மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணை

(வவுனியா)

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வைத்து ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழுவினரால் நெடுங்கேணிப் பொலிஸார் மற்றும் வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டது.

வவுனியா, உள்வட்ட வீதியில் அமைந்துள்ள மனிதவுரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு நேற்று அழைக்கப்பட்ட நெடுங்கேணிப் பொலிஸார், வனவளத் திணைக்களத்தினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், வாக்குமூலமும் பெறப்பட்டது.

இதன்போது, வனவளத் திணைக்களத்தினர் தாம் அங்கு சென்று பார்த்த போது தமது வனப் பகுதிக்குள் தீ மூட்டப்பட்டிருந்ததாகவும், பிளாஸ்ரிக் பொருட்கள், சமையல் கழிவுகள், ஆலய பூசைப் பொருட்கள் அங்கு கொட்டப்பட்டிருந்ததாகவும் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தனர்.

பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் தெரிவிக்கும் போது தொல்பொருள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரமும், வனப் பகுதிக்குள் தீ மூட்டப்பட்டமை காரணமாகவும் கைது செய்ததாக தெரிவித்ததுடன், தாம் எவர் மீதும் தாக்குதல் நடந்தவில்லை எனவும், வேட்டியை கழற்றி அரை நிர்வாண நிலையில் கொண்டு செல்லவில்லை எனவும் தெரிவித்தனர்.

விசாரணைகளின் முடிவில் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தினர், கடந்த மாதம் 8 ஆம் திகதி சிவாரத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரை நெடுங்கேணி பொலிஸார் கைது செய்து எம்மை சிறையில் அடைத்தனர்.

அதனைத் தொடர்ந்து எமது உறவினர்கள் வவு னியா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் செய்தமுறைப்பாட்டுக்கு அமைய 8 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு விசாரணைகள் பொலிஸார் மற்றும் வன வளத் திணைக் கள அதிகாரிகளுடன் இடம்பெற்றது.

இதன்போது நாம் அங்கு நடந்த சம்பவங்களை தெளிவாகப் பதிவு செய்ததுடன், பொலிஸார் சப்பாத்துக்களுடன் ஆலயத்திற்குள் புகுந்து பலவந்தமாக அங்கு இருந்தவர்களை வெளியேற்றி கைது செய்தமை மற்றும் கைது செய்த போது வேட்டியை கழற்றி அரை நிர்வாணமாக கொண்டு சென்றதுடன் தாக்கியது தொடர்பிலும் சுட்டிக் காட்டியிருந்தோம். அத்துடன் ஆலய வழிபாட்டுக்கு அனுமதிக்காமை, ஆலயத்திற்குள் குடிநீர் கொண்டு செல்ல விடாமை உள்ளிட்ட விடயங்களையும் சுட்டிக்காட்டினோம்.

இவை தொடர்பில் கருத்துக்களை கேட்டறிந்த மனிதவுரிமை ஆணைக் குழுவினர், எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் அவை தொடர்பான சான்றுகள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதையும் சுட்டிகாட்டியிருந்தோம். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யுமாறும் மனிதவுரிமை ஆணைக் குழுவினர் தெரிவித்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ம-7,10)

# ஈரான் - இலங்கை இடையில் 5 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்தில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கைச்சாத்திடப் பட்டன.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் ஊடாக திரைப்படத் துறை, ஊடகம், சுற்றுலா, கூட்டுறவு, நூலகங்கள், கலாசாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இரு நாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் இருதரப்பு சந்திப்பொன்றும் நடைபெற்றது.

இதன் பின்னர் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0200)

076 825 7716 (ஆகாஸ்)

**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (551)

074 17 37 684

**CANADA VISA**

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)

021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

**IELTS** - 27.04.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (544)

**வேலையாள் தேவை**

உணவகம் ஒன்றிற்கு கொத்து ரொட்டி செய்யத் தெரிந்தவர் தேவை.

தொடர்புகளுக்கு : (552)

077 629 0894

**மணப்பெண் தேவை**

- புலோலி - தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1991, மிருகசீரிடம், Civil Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொடிகாமம், இந்து, கௌரவகுலம், 1980, ஆயிலியம், Lawyer, Business, Australia, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவகுலம், 1988, ரேவதி, B.Sc Chemical Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நல்லூர் - அளவெட்டி, இந்து, கௌரவகுலம், 1985, திருவோணம், Locomotive Engineer, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1989, புனர்பூசம், B.Sc, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம், 1976, பூசம், A/L, Customer service, Germany, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருநெல்வேலி - கோப்பாய், இந்து, கௌரவகுலம், 1983, உத்திரட்டாதி, MBBS Doctor, Germany மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவகுலம், 1989, மூலம், Graduate, Denmark மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அராலி - பண்டத்தரிப்பு, இந்து, கௌரவகுலம், 1981, உத்தராடம், Computer Officer, France மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1994, உத்திரட்டாதி, Senior IT Analyst, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(539)

-077 539 3728 -077 803 8193

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்கு உதவியாளர் தேவை. (554)

T.P : 076 731 5464

Email - forturnegeneraltradingpvtltd@gmail.com

**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு (C-0201)

**2023 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு**

வரலாறு — ஆசிரியர் RS. சந்திரன்

காலம்: ஏப்ரல் 27, 28 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள் :
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும். (501)

**றோயல் அக்கடமி**
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134 நிர்வாகம்

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-0201)

எமது கிளைகள்: •கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.